Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(சி/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 11 (30.06.2004) புதன்கிழமை இதழ்:271

# இடைக்கால நிர்வாகம் பற்றி பேச ஜனாதிபதி சந்திரிகா இணக்கம்!

## நோர்வே தூதரக வட்டாரங்கள் தகவல்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் உள்ள பிரதான தடைகளை நீக்கி –**

**விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை குறித்து முதலில் பேச்சு நடத்த ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்திருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச்சு நடத்தும் போது, இறுதி அரசியல் தீர்வுடன் தொடர்புடைய அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தே பேச்சு நடத்தப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா முன்னர் தெரிவித்திருந்தார்.

இதனால், மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் நெருக்கடிகள் ஏற்பட்டன.

முதலில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்களை நடத்தி இணக்கப்பாடு காணவேண்டும் என்றும் அதன்பின்னரே இறுதி அரசியல் தீர்வு குறித்துப் பேசமுடியும் என்றும் விடுதலைப் புலிகள் கூறினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் காணாமற்போனவர் 14 ஆண்டுகளின் பின் கண்டுபிடிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு ஏறாவூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனதாகக் கருதப்பட்ட ஒருவர் உயிருடன் இருப்பதாக அவரது மனைவிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

12.12.1990 அன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலவெட்டுவான் வயலில் வேலை செய்துவிட்டு மட்டக்களப்பு நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நான்கு பிளளைகளின் தந்தையான கதிர்காமத்தம்பி - சாந்தலிங்கம் என்பவரே ஏறாவூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

இதன்பின்னர் இவர் தொடர்பான விபரங்கள் எதுவும் தெரியாத நிலையில் இவரது மனைவி சகல படை முகாம்களுக்கும் சென்று விசாரித்தும் எவ்வித தகவலையும் பெற முடியவில்லை.

இந்த நிலையில் காணாமற்போன தனது கணவனைக் கண்டுபிடித்து தருமாறு இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இவரைத் தேடிக் கண்டுபிடித்த செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொம்மாந்துறையில் உள்ள இவரது மனைவியிடம் கடந்த 3 நாட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட கருணா அணியினர் ஏழு பேர் கைது!

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு



கைதுசெய்யப்பட்டோரில் ஐவர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டுவந்த கருணா அணியைச் சேர்ந்த ஏழுபேரை தாம் கைதுசெய்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான படுவான்கரையிலுள்ள கிக்கோடை, தும்பன்கேணி பகுதியில் ஒரு குழுவும் - இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமான கல்லாறு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, போன்ற இடங்களில் இருந்து இன்னொரு குழுவும் கைதுசெய்யப்பட்டன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கிகள், குண்டுகள், கையடக்கத் தொலைபேசிகள், மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பனவற்றை தாம் பெருமளவில் கைப்பற்றியதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து இவர்கள் பல தேச விரோத செயல்களில் ஈடுபட்டதாகவும், இவர்கள் மீது நடத்தப்பட்ட விசாரணைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட தூதுவர் சொல்ஹெய்ம் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

### முக்கிய விடயங்கள் குறித்து பேசுவார்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று முற்பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெறும் சந்திப்பில், எரிக் சொல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான அரசாங்கத் தரப்பின் யோசனைகள் குறித்து சொல்ஹெய்ம் இந்தச் சந்திப்பின்போது விளக்கிக் கூறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இந்தச் சந்திப்பின்பின் போது - கருணா விவகாரத்தால் எழுந்திருக்கும் நெருக்கடிகள் குறித்தும், இதனால் அரசாங்கத்தின் மீது ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள் குறித்தும் புலிகள் தமது நிலைப்பாட்டை நோர்வே தூதுக்குழுவுக்கு தெளிவுபடுத்த விருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை. நேற்றுக்காலை இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்பட்ட இந்தச் சந்திப்பு, ஜனாதிபதி சந்திரிகா கொழும்பில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தாக்குதல் விமானம் விமானப்படை கொள்வனவு!

விமானப் படைக்கென விரைவில் கிபிர் தரைத்தாக்குதல் ஜெட் விமானம் ஒன்றை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப் போவதாக விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

விமானப் படைக்கு நிலவிவரும் யுத்த விமானங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது.

இதையடுத்தே, தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் கிபிர் ஜெட் விமானம் ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இஸ்ரேலின் ஐ.ஏ.எவ். சங்கத்திடம் இதே விமானத்தைக் கொள்வனவு செய்வதற்கான கடிதக் கோவைகளின் பரிமாற்றங்கள் முடிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படடது.

இந்த விமானம் யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதுடன், விமானப்படையினரின் பயிற்சிகளுக்கும் இதனைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். செயலக நிதி மோசடி விவகாரம்: முன்னாள் அரசாங்க அதிபர் சி.ஐ.டியினரால் விசாரணை!

றான் அமைப்பின் முன்னாள் பொறியியலாளர் கிரிதரன் மற்றும் முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் சண்முகநாதன் ஆகியோர் யாழ். செயலக நிதிமோசடி குறித்து குற்றப் புலனாய்வு பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பாகவே இவர்கள் இருவரும் கொழும்பு சி.ஐ.டி அலுவலர்களால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றில் சி.ஐ.டியினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விசாரணைகளை நடத்துவதற்கு வசதியாக யாழ். மாவட்ட நீதிவான் றான் அமைப்பின் கணக்குகள் பதியப்பட்ட மற்றும் காசோலைகள் மாற்றப்பட்ட வங்கிகளின் கணக்கறிக்கைகளை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதன்படி முன்னாள் றான் அமைப்பின் பொறியியலாளர் பத்மநாதன் கிரிதரன் மற்றும் முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன் முதலானோர் மீது சி.ஐ.டியினர் மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் தடயங்கள் தொடர்பான முழு அறிக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

24 அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்த முழு விபரம் வெளிவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ப)

## நாடாளுமன்றைக் கூட்டுவது; சபாநாயகர் இன்று ஆராய்வு!

எதிர்வரும் ஜூன் மாதம் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து நாளை கட்சித்தலைவர்களுடன் சபாநாயகர் ஆராயவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் - அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் பிரசன்னமாகுமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது - ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

ஏற்கனவே 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட முடிவு எடுக்கப்பட்டபோதும், எதிர்க் கட்சிகள் அதற்கு முன்னர் நாடாளுமன்ற அமர்வு கூட்டப்பட வேண்டுமெனக் கோரியுள்ளன.

கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர், நான்கு தடவைகள் நாடாளுமன்ற அமர்வு நடத்தப்பட்டபோதும் அவை யாவும் கலகநிலையால் இடையில் நிறுத்தப்பட்டன. இறுதி அமர்வின்போது ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்டனர்.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com. (சி/2489)
EXPOAIR
Your friend in the skies...

# தகாத செயலில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் வசமாக மாட்டினார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனமொன்றின் நிர்வாகியும், உதவியாளரான யுவதியும் தகாத செயலில் ஈடுபட்டிருந்தபோது- இளைஞர்கள் சிலரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது - குறிப்பிட்ட தனியார் கல்வி நிறுவன நிர்வாகியும், அவரது காரியாலய உதவியாளராகப் பணியாற்றும் யுவதியும் நீண்ட நாட்களாக தவறான நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

இதனை அவதானித்து வந்த சமூக முன்மாதிரி இளைஞர்கள் சிலர், கடந்தவாரம் இந்த இருவரும் தவாறான நடத்தையில், நள்ளிரவு குறித்த தனியார் கல்வி நிறுவனத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, கலாசாரம் பேணும் குழுவினர் அவர்களை விசாரித்து ஆலோசனை வழங்கி வீட்டிற்கு அனுப்பியதுடன், இனிமேல் இவ்வாறான நடத்தைகளில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை - இந்தத் தகாத செயலில் ஈடுபட்ட தனியார் கல்வி நிலைய நிர்வாகி யாழ். நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் ஒழுக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆசிரியராகக் கடமையாற்றுவதாகவும் தெரியவருகிறது.

## மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டம்

'சலன சித்திரம் - யாழ்ப்பாணம் திரைக்கலை அமைப்பின் மாவட்ட நிர்வாகக்குழுக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கரவெட்டியிலுள்ள சம்மேளன கிளைச் செயலகத்தில், அதன் தலைவர் வி.எஸ். சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.


நிறஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், தேவயானி நடித்த
மகாபிரபு
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHTREMITIEH (சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
விஜய், திரிஷா,பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி

காட்சிநேரம்:-10.30,2.30,6.30 (பு.நே)
3 ஆம் திகதி முதல் பேரழகன்
(சி-2623)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன்
நடித்த
படையப்பா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


## யாழ்ப்பாண மாநகரசபை

### மீள்நியமன விண்ணப்பம்

### குடும்பநல சேவையாளர்

மாநகரசபையால் நிர்வகிக்கப்படும் மகப்பேற்று நிலையங்களில் பணிபுரிவதற்காக ஓய்வுபெற்ற குடும்பநல சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகமை உள்ளவர்கள் சுயமாகத் தாங்கள் தயாரித்த விண்ணப்பப்படிவத்துடன் தமது ஓய்வூதியக்கொடையின் பிரதி ஒன்றினையும் இணைத்து எதிர்வரும் 2004.07.14 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மீள்நியமன காலத்தில் 01/2003 இலக்க 03.01.2003 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைவாக மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை சபையின் சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (சி-2716)



## மங்களகரமான புதுக்கடை திறப்பு விழா



அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் ஆனித் திங்கள் 16 ஆம் நாள் இன்று (30.06.2004) புதன்கிழமை காலை 9 மணி முதல் 11.56 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படும்

### Hi Fi Electronic

ஹை ப(f)ய் இலற்றோனிக்

என்னும் ஸ்தாபனத்தை திறந்து எமது சேவையை வழங்குகின்றோம் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இல 780, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

சி.சதீஸ்
உரிமையாளர்

குறிப்பு -
இதுவரை காலமும் நாவலர் வீதியில் தற்காலிகமாக இயங்கிய எமது ஸ்தாபனம் இனிமேல் மேற்படி பெயர் முகவரியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (771)

# மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளையின் நீடித்த கருமபீடம் திறப்புவிழா

இடம்: - மல்லாகம் (சந்திக்கு அருகாமை)
காலம்: - 01-07-2004 வியாழக்கிழமை
நேரம் :- காலை 10.00 மணி

**முதன்மை விருந்தினர்**

கலாநிதி க.குணராஜா அவர்கள்
(பிரதேச செயலர் வலி வடக்கு)

**சிறப்பு விருந்தினர்**

மருத்துவ கலாநிதி எஸ்.சிவராணி
(மாவட்ட வைத்திய அதிகாரி - தெல்லிப்பளை)

திரு.கா.சந்திரபாலன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - தெல்லிப்பளை)

திரு.க.சிவபாலன்
(முகாமையாளர், இலங்கை வங்கிக் கிளை, காங்கேசன்துறை)

திரு.எல்.செல்வரட்ணம்
(செயலாளர், பிரதேசசபை, வலி வடக்கு)

திரு.க.சித்திவிநாயகவடிவேல்
(செயலாளர், வணிகர் கழகம், மல்லாகம்)

திரு.சி.சிவமகாராசா
(ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பளை)

திரு.கு.கந்தசாமி
(தலைவர், அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்)

திரு.மா.நாகேந்திரசீலன்
(அதிபர், மல்லாகம் மகா வித்தியாலயம்)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.சி.இளம்பிறைநாதன்
(மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் - வட வலயம்)

திரு.க.சிவபாதவிருதையர்
(மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் - யாழ்/வன்னி)

திரு.க.ஆனந்தராஜா
(மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் - யாழ்.)

திரு.ரகு
(மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் - யாழ்ப்பாணம்)

*நிகழ்ச்சி நிரல்:*

அக வணக்கம்
விருந்தினர் உரைகள்
சிசு உதான, இசுறு உதான மற்றும் சிறப்புக் கணக்குகளுக்கான பரிசளிப்பு,
புதுக் கணக்குகள் ஆரம்பித்தல்.

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கவும், கணக்குகளைத் திறந்து பயன்பெறவும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
மக்கள் வங்கி
காங்கேசன்துறைக் கிளை.

(சி-2717)

# எதிர்க்கட்சி ஆட்சியமைத்தாலும் அடுத்த நாளே கலைக்கப்படும்

## ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசு - நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்காவிட்டால் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள், அரசை அமைக்குமென ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்கள் சவால் விடுத்துள்ளனர்.

அப்படி ஆட்சியமைக்கப்படு மாக இருந்தால் அடுத்த தினமே அந்த அரசைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான அமைப்பாளரும், வர்த்தக வியாபார, பாவனையாளர்கள், விவகார அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளராக கடந்த வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்ட தன் பின்னர் நடத்திய முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தேர்தலின் பின் அமைக்கப்பட்ட அரசாங்கத்தை ஒரு வருடத்துக்குள் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லையென எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர் எண்ணியுள்ளனர். மக்களது வாக்குகள்மூலம் தெரிவான அரசாங்கத்தினாலேயே அவ்வாறு கலைக்கமுடியாது.

எமது அரசாங்கத்திற்கு மாத்திரமே அந்தச் சட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆனால், எமக்குப் பின் நியமிக்கப்படும் அரசாங்கத்தை நடாத்துவதற்கு எவருக்கும் அதிகாரமல்லை. ஆகையால், அதுபோன்ற அரசாங்கத்தினைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் அதிகாரமுண்டு.

பொது எதிர்க்கட்சி எனக் கூறி 114 கையொப்பங்களடங்கிய கடிதத்தினை சபாநாயகரிடம் வழங்கி நாடாளுமன்றத்தின் குழுக்களின் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வோமென எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் கூறியுள்ளனர்.

அரசியலமைப்புக்கு அமைய நாடாளுமன்றத்தின் அனைத்துக் குழுக்களின் அதிகாரங்களும் அரசுக் கட்சிக்கு உரியதாகும். அது நாடாளுமன்ற அரசியலமைப்பு ஆணைகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு என்பது சிறுபான்மையா, பெரும்பான்மையா என்ற பிரச்சினை எழவேண்டிய தேவையில்லை.

அரசின் நடவடிக்கைகளை அரசிற்கு தேவையான விதமாக நடத்திச் செல்வதற்கு இடம் வழங்க வேண்டுமென சபாநாயகருக்கு நாம் கூறுகின்றோம்.

எதிர்க்கட்சி நாடாளுமன்றில் எதனையும் பேச முடியும். ஆனால், அரசின் நடவடிக்கைகளை நாடாளுமன்றில் சரியான திசையில் நடாத்திச் செல்வதற்கு அரசுக்கு உரிமை உணடு.

நாடாளுமன்றில் அரசாங்க கட்சியின் வேலைகளை, அரசாங்க கட்சிக்கு தேவையான விதமாக இடம் வழங்குமாறும் நாம் சபாநாயகரிடம் கூறுகின்றோம்.

அவ்வாறு இல்லாது போனால் சபாநாயகரின் வேலையும் இல்லாது போகும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சமகால அரசியல் கருத்தரங்கு

(நவிண்டில்)

யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்கள் நடத்தும் சமகால அரசியல் கருத்தரங்கும், சம்மேளன நிர்வாக சபைக் கூட்டமும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு இல,165 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சார்ந்தவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். (116)

## முழுநிலா கலையரங்கு

கிளிநொச்சி அரசியற்துறையின் ஆதரவுடன், கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தை இணைந்து, தமிழீழ நுண்கலைக் கல்லூரி நடாத்தும், மாதாந்த முழுநிலாக் கலையரங்கு - எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# நிபந்தனையின் அடிப்படையில் அரசுக்கு ஆதரவு வழங்க ஜாதிக ஹெல உறுமய உறுதி!

(கொழும்பு)

நிபந்தனைகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு ஜாதிக ஹெல உறுமய உறுதியளித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் ஜாதிக ஹெல உறுமயவின் உயர் பீடத்தை அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தாக்கப்பட்டமைக்கு அரசாங்கம் மன்னிப்புக் கோருமாக இருந்தால், நிபந்தனைகளின் அடிப்படையில் அரசாங்கத்துக்கான ஆதரவை வழங்குவதற்கு தயாராகவிருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, அரச ஊடகங்களில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு எதிரான பிரசாரங்கள் இனிமேல் மேற்கொள்ளப்படமாட்டாதென ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஜாதிக ஹெல உறுமயவிடம் உறுதியளித்தாகவும் தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு, அதன் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி. பெரும் தடையாக இருப்பதையும் ஜாதிக ஹெல உறுமய - மங்கள சமரவீரவிடம் சுட்டிக்காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இணக்கப்பாட்டினை அடுத்து, நாடாளுமன்றத்தில் தமது உறுப்பினர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராக தென்னிலங்கையில் நடத்தப்படவிருந்த அரசாங்கத்துக்கு எதிரான கண்டனப் பேரணிகள் மற்றும் சத்தியாக்கிரகப் போராட்டங்களை வாகனப் பேரணியாக மாற்றியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்தப் பேரணியில் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிரான சுலோகங்களுக்குப் பதிலாகப் பொதுச்சுலோகங்களை பாவிப்பதென ஜாதிக ஹெல உறுமய முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவுடனான மங்கள சமரவீரவின் இந்தச் சமரச முயற்சிகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவர்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துடனான இந்தச் சமரச முயற்சிமூலம் தனது கட்சியின் உட்பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு ஜாதிக ஹெல உறுமய முனைவதாகவும் அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

# பிரதிவாதிகளை மாற்ற மேல் நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசும், விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறுகோரி செய்யப்பட்ட மனுவின் பிரதிவாதிகளை மாற்றுவதற்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும் எனக்கோரி, மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கலை ஜே.வி.பி தாக்கல் செய்திருந்தது.

இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியடைந்ததையடுத்து, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சரவை மனுவின் பிரதிவாதியாக மாற்றுவதற்கு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இத்துடன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, எதிர்வரும் யூலை மாதம் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு, மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வா, சிஹல உறுமய கட்சியின் சார்பில் திலக் கருணாரத்ன, சிங்கள ஜாதிக சங்கமய ஆகிய கட்சிகள் இந்த மனுவைத்தாக்கல் செய்தன.

## வைத்தியசாலை பாதுகாப்புப் பணியில் பெண்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமைகளுக்குப் பெண்களும் இணைக்கப்பட்டுள்ளனர்.

தென் பகுதியைப்போன்று யாழ்ப்பாணத்திலும் தற்போது தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களே - திணைக்களங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்புச் சேவையை வழங்கி வருகின்றன.

இதுவரை காலமும் இந்தப் பாதுகாப்புச் சேவையில் ஆண்கள் மட்டுமே கடமையாற்றி வந்தனர். ஆனால், தற்போது பெண்களும் இந்தப் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களில் இணைந்து கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

# தேசிய துணைப் படையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படும்

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

தமிழீழத் தேசியப் படையில் இணைபவர்களுக்கு இராணுவப் பயிற்சி உள்ளிட்ட விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

தேசவிரோத சக்திகளின் ஊடுருவல் இடம்பெறலாம் என்ற அடிப்படையில் மிகவும் அவதானமாகவே தமிழீழத் தேசியப் படைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகிறன.

தமிழீழத் தேசியப் படைக்கான இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை வரை சுமார் 300 பேர் இணைந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடுவதற்கு ஏற்றவகையில் ஆறு மாதகால விசேட இராணுவப் பயிற்சிகளும் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தப்புதிய திட்டத்தின் கீழ் சுமார் 1,500 தேசியப் படைவீரர்கள் உருவாக்கப்படவுள்ளதோடு, இவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக 8,500 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை மீனவர்களில் பதினைந்து பேரை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவு

(கொழும்பு)

இந்தியக் கடலோரக் காவற்படையால், எல்லை தாண்டியதாகக் கூறிக் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 15 பேரை விடுதலை செய்யத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. அதனைத் தொடர்ந்து 15 இலங்கை மீனவர்களையும் இராமநாதபுர நீதிமன்றம் விடுதலை செய்தது.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி, இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்து, மீன் பிடித்ததாகப் புத்தளம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சந்திர திலகா, நிகல்சுமதி பாலா, அஜித்குமார உட்பட 18 மீனவர்களை நடுக்கடலில் இந்தியக் கடலோரக் காவற்படையினர் கைது செய்து, இராமநாதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது. நீதிபதி - அவர்களை மதுரைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இதற்கிடையே இந்த மீனவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று, இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதனைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மதுரைச் சிறையிலிருந்து 18 பேரில், 15 மீனவர்கள் இராமநாதபுரத் தலைமைக் குற்றவியல் நீதிபதி மணிப்பிள்ளை முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர். நீதிபதி அவர்களை விடுவிக்க உத்தரவிட்டார்.

18 பேரில் விடுதலை செய்யப்பட்டவர்கள், 15 பேர் போக, மீதியுள்ள சீலாரன்ஸ், சத்தியசீலன், அநதோனி, ஸ்டீபன், கொஸ்தா, ஜெபமாலை, நெல்சன் ஆகியோர் மீது பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தவுடன் விடுதலை செய்யப் படுவார்கள்.

மனிதாபிமான அடிப்படையில் இலங்கை மீனவர்களை விடுதலை செய்தமைக்கு இலங்கை மீனவர் சங்க இயக்குநர் - சிரிமால் பெர்ண்டோ இலங்கை மீனவர்களின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

# கூட்டுப்படைகளின் தளபதியாக அசோக ஜெயவர்த்தன நியமனம்!

(கொழும்பு)

கூட்டுப்படைகளின் தளபதியாக வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராவணுத் தளபதியாகவும், கூட்டுப்படைத் தளபதியாகவும் கடமையாற்றி வந்த லயனல் பலகல்லவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடையவுள்ளதையடுத்து, இராணுவத் தளபதி பதவிக்கு மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கூட்டுப்படைத் தளபதிப் பதவிக்கு கடற்படைத் தளபதி தயா சந்தகிரியை நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருந்தார்.

ஆனால், இந்தப் பதவிக்கு ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமிப்பதே பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் அசோக ஜெயவர்த்தனவை ஜனாதிபதி நியமிக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பல நாடுகளில் முப்படைகளுக்குமான தளபதியாகச் சிரேஷ்ட படை அதிகாரி ஒருவரே நியமிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# அரையிறுதிப் போட்டியில் இன்று போர்த்துக்கல் - ஹொலண்ட் மோதல்



சர்வதேசரீதியில் பெரிதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் ஐரோப்பிய கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் ஆரம்பமாகின்றன.

'யூரோ 2004' என்று அழைக்கப்படும்



ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டி போர்த்துக்கலில் கடந்த 12 ஆம் திகதி தொடங்கியது.

3 முறை சம்பியனான ஜேர்மன், 1968 ஆம் ஆண்டு சம்பியனான இத்தாலி, 1964 ஆம் ஆண்டு சம்பியனான ஸ்பெயின் போன்ற முன்னணி நாடுகள் காலிறுதிக்குக்கூடத் தகுதி பெறவில்லை.

2 முறை கிண்ணத்தை வென்ற பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியன கால் இறுதியில் அதிர்ச்சிகரமாகத் தோற்றன. கால் இறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் முடிந்தது. அதன்படி ஹொலண்ட், கிரீஸ், போர்த்துக்கல், செக் குடியரசு ஆகிய நாடுகள் அரை இறுதிக்குத் தகுதிபெற்றன.

ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டிகளின் முதல் அரை இறுதி ஆட்டம் லிஸ்பன் நகரில் நடைபெறும். இதில் ஹொலண்ட் -



போர்த்துக்கல் அணிகள் மோதவுள்ளன.

இரு அணிகளும் பலம் வாய்ந்தவை என்பதால் இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இரு அணியிலுமே உலகின் தலைசிறந்த வீரர்கள் உள்ளனர்.

ஹொலண்ட் அணியில் - வான்நிஸ்டல்ரூயி, பவுமா, எட்கார்டேவிஸ், ரோபென், போன்ற வீரர்களும், போர்த்துக்கல் அணியில் - லூயிஸ்பிகோ, ருயிஸ்கோடா, பவ்லெட்டா போன்ற வீரர்களும் உள்ளனர்.

இரு அணிகளுமே கால் இறுதியில் 'பெனால்டி சொட்' முறையிலேயே வெற்றி பெற்றன. இரு அணிகளும் அரை இறுதிக்குத் தகுதிபெற அந்தந்த அணிக் கோல்கீப்பர்கள் காரணமாக இருந்தனர்.



ஹொலண்ட் அணி லீக் ஆட்டத்தில் லத்வியாவை மட்டும் வென்றது. ஜேர்மனுடன் சமப்படுத்தியது. செக்குடியரசிடம் தோற்றது. கால் இறுதியில் சுவீடனைத் தோற்கடித்தது. போர்த்துக்கல் லீக் ஆட்டத்தில் ஸ்பெயின், ரஷ்யாவை வென்றது. கிரீஸிடம் அதிர்ச்சிகரமாகத் தோற்றது. கால் இறுதியில் இங்கிலாந்தை வென்றது.

ஹொலண்ட் அணியின் சிறந்த பின்கள வீரரான பிராங்டி போயர் காயம் காரணமாக இன்றைய ஆட்டத்தில் விளையாடமாட்டார். இது அந்த அணிக்குப் பலவீனமே. உள்ளூர் ரசிகர்கள் ஆதரவு போர்த்துக்கல் அணிக்குப் பலமாக இருக்கும்.

ஹொலண்ட் அணி 1988 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ணத்தைக் கைப்பற்றியது. போர்த்துக்கல் முதல் முறையாக அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது. உதைபந்தாட்ட வல்லுநர்களின் கணிப்புப்படி இன்றைய ஆட்டத்தில் ஹொலண்ட் அணி வெற்றிபெற வாய்ப்பிருக்கின்றது.

Euro 2004 PORTUGAL

## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டப் போட்டி

கரும்புலிகள் நினைவாக தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன், வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்றும் நடைபெறவுள்ளன.

மின்னொளியில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் - இன்று மாலை 7 மணிக்கு யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இன்னொரு காலிறுதி ஆட்டத்தில் இன்றிரவு 8 மணிக்கு காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இதேவேளை, அரையிறுதிப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெற விருப்பதுடன் மூன்றாவது இடத்தைப் பெறும் அணித் தெரிவுப் போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதேவேளை, கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.




## பாகிஸ்தான் குத்துச்சண்டை வீரருக்கு ஒரு ஆண்டு தடை

(லாகூர்)

பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னணி இளம் குத்துச் சண்டை வீரர் நவ்மன் ஹரீம் சமீபத்தில் நடந்த தெற்காசியப் போட்டியில் வெற்றி பெற்றிருந்த போதும், இவருக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் போதைமருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் ஒரு ஆண்டு போட்டியில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், அவர் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தும் அதில் பங்கேற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நவ்மன் உலகப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற முதல் பாகிஸ்தான் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விம்பிள்டன் ரெனிஸ் காலிறுதிக்குள் பெடரர்



(லண்டன்)

லண்டன் நகரில் நடைபெற்றுவரும் ரெனிஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் உலகின் முதன்நிலை வீரரான ரோஜர்பெடரர் நான்காவது சுற்றில் வெற்றிபெற்று கால் இறதிக்குத் தகுதிபெற்றார்.

உலகின் முதன்நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து), 4 ஆவது சுற்றில் குரோஷியா வீரர் கார்லோவிக்கை எதிர்கொண்டார்.

இதில் பெடரர் 6-3, 7-6 (7-3), 7-6 (7-5) என்ற நேர் செற்கணக்கில் வென்று கால் இறுதிக்குத் தகுதிபெற்றார்.

இரண்டாம் நிலை வீரரான ஆன்டிரொட்டிக் (அமெரிக்கா) நாலாவது சுற்றில் 7-5, 6-4, 6-4 என்ற நேர் செட்கணக்கில் அலெக்சான்டர் பொப்பை (ஜேர்மன்) தோற்கடித்தார்.

5 ஆம் நிலை வீரரான ஹென்மன் (இங்கிலாந்து) 6-2, 7-5, 6-7 (3-7), 7-6 (7-5) என்ற செட்கணக்கில் அவுஸ்ரேலிய வீரர் பிலிப்போசியைத் தோற்கடித்து கால் இறுதிக்குத் தகுதிபெற்றார்.

9 ஆம் நிலை வீரரான கார்லோஸ் மோயா (ஸ்பெயின் ) நான்காவது சுற்றில் தோற்றார். 7 ஆம் நிலை வீரரான லைடன் ஹெவிட் (அவுஸ்ரேலியா ) 6-4, 6-2, 4-6, 7-6 (7-3) என்ற கணக்கில் மோயாவைத் தோற்கடித்தார். மற்ற ஆட்டங்களில் புளோரியன், குரோஸ் ஜியான் மேரியா, செஜங் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் மோதும் வீரர்கள் வருமாறு -

1. பெடரர் (சுவிற்சர்லாந்து) - ஹெவிட் (அவுஸ்ரேலியா )
2. புளோரின் (ஜேர்மன்) - குரோஸ்ஜியான் (பிரான்ஸ்)
3. ஹென்மன் (இங்கிலாந்து) - மேரியோ (குரோஷியா)
4. ரொட்டிக் (அமெரிக்கா)- செஜங் (ஹொலண்ட்)

பெண்கள் ஒற்றையர் கால் இறுதியில் 2 ஆட்டங்களில் மோதும் வீராங்கனைகளின் விபரம் தெரியவந்துள்ளது. அதன்படி ஒரு கரிறுதியில் டேவன் போர்ட் (அமெரிக்கா) - கரோலினா (குரோஷியா) மோதுகிறார்கள். மற்றொரு கால் இறுதியில் சுகியாமா (ஜப்பான்) - மரியா ஷாராபோவா (ரஷ்யா) மோதுகிறார்கள்.

## வடமராட்சி பகுதிக்கான கிரிக்கெட், கரப்பந்தாட்ட சங்க நிர்வாகிகள் தெரிவு

யாழ். மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தலைமையில், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் - வடமராட்சிக்கான கிரிக்கெட் சங்கமும், கரப்பந்தாட்டச் சங்கமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவுசெய்யப்பட்டன.

கிரிக்கெட் சங்கத்தின் தலைவராகப் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த முரளியும், செயலாளராக அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுவேந்திரனும், பொருளாளராக திட் ம் இளைஞர் விளையாட்டுக்கழக முருகரூபனும், உப தலைவராக மனோகரா விளையாட்டுக் கழக கௌதமனும், உப செயலாளராக கஜகுகன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சதீஸ"ம் தெரிவுசெய்யப்பட்டனர்.

கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவராக மனோகரா கழகத்தைச் சேர்ந்த பவாநந்தனும், செயலாளராக இமையாணன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ராஜகோபாலனும், பொருளாளராக திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பார்த்தீபனும், உபதலைவராக அண்ணா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மலைச்செல்வனும், உப செயலாளராக அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரசன்னாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (12)

## கே.சி.சி.சி., பல்கலைக்கழக அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின!

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற இரண்டு ஆட்டங்களில் -

கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணியும், யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணியும் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் - ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி, 22 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப்பெற்றது.

இந்த அணியின் சார்பில் செல்வராஜா 23, றொகான் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே.சி.சி.சி. கழக அணியின் சார்பில் பந்துவீசிய எல்.உமாநாத், எஸ்.கிருபன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ரி.பிரகாஷ், என்.ரதீஸ்வரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணி 14.3 ஓவர்களிலேயே - விக்கெட் இழப்பு எதுவுமின்றி 103 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது.

இந்த அணி வீரர்களான சி.மதுசன் 45 ஓட்டங்களையும், என்.பிரதீபன் 44 ஓட்டங்களையும்பெற்று அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தனர்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இன்னொரு காலிறுதி ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணியின் சார்பில் துடுப்பாட்டத்தில் - சுதர்சன் 49, பிருந்தாபன் 41 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பல்கலைக்கழக அணி வீரர் அருள் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 27 ஓவர்களிலேயே - 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

பல்கலைக்கழக அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய சர்வா 60, ரஜீவன் 37, கௌரிபாகன் 34, யதார்த்தனன் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென்ரலைட்ஸ் கழக அணி சார்பில் பந்துவீச்சில் நிசாகரன், றொகான், பிரகாஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.




# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

1. மனிதரால் அமைக்கமுடியாத கூட்டை அமைப்பவை
   (1)சிலந்தி (2)காகம் (3)கிளி (4)மைனா
2. நுளம்பின் வாழ்க்கை பருவம் அல்லாதது
   (1)கூட்டுப்புழு (2)முட்டை (3)குடம்பி (4)குட்டி
3. நீரிலும் தரையிலும் வாழும் பிராணி
   (1)தாரா (2)மீன் (3)தவளை (4)கொக்கு
4. குட்டி ஈனும் பிராணிகளில் ஒன்று
   (1)வாத்து (2)தேனீ (3)காகம் (4)குரங்கு
5. காலாவதியான உணவை உட்கொள்வதால் ஏற்படுவது
   (1)போசாக்கு (2)நோய் (3)பணச்செலவு (4)வருமானம்
6. வீட்டுத்தோட்டத்தில் பயிர் செய்யக்கூடியவை
   (1)தேயிலை (2)மரக்கறிகள் (3)உணவுப் பொதிகள் (4)இறப்பர்

◆

7. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் பூக்களின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களில் இருந்து தெரிவு செய்து எழுதுக




(i) (ii) (iii) (iv)

(தாமரை, அல்லி, செவ்வரத்தை, றோஜா, நித்தியகல்யாணி, சதை கரைச்சான், பெகோணியா, குளவாழை)

◆

8. பின்வரும் படத்தைப் பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக



i. இதனை எவ்வாறு அழைப்பர்? ..............................

ii. இதிலுள்ள நிறங்கள் எதனைக் குறிக்கின்றன? ...............

iii. இவ்வுருவில் நான்கு மூலைகளிலும் காணப்படுபவையாவை?.....

iv. இப்படத்தில் உள்ள மிருகத்தின் பெயர் என்ன?...............

◆

9. பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களில் பயன்படுத்தப்படு கின்றன என விடைக்கோட்டில் எழுதுக.

i ii iii iv



.............. .............. .............. ..............


◆ பின்வரும் பாடலில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக

நண்டின் (1) ...................... ஒடிக்காதே
(2) ....................... கல்லால் அடிக்காதே
வண்டைப் பிடித்து (3) .....................
(4) .................... பிராணியை வதைக்காதே
கோழிக் (5) ..................... திருகாதே
(6) ........................... கூட்டைச் சருவாதே
ஆழி சூழும் (7) ...........................
(8) ...................... காட்டி வருவாயே

(நாயைக், குஞ்சைத், காலை, குருவிக், வருத்தாதே, கூட்டைக், உலகத்தும், வாயில், கோபம், அன்பு)

◆ பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

i.




இவ்விருவின் சுற்றளவு யாது?
...................................

ii. $\frac{1}{3}+\frac{3}{6}=\frac{2}{\square}+\frac{\square}{6}=\frac{\square+\square}{6}=\frac{\square}{6}$

கூடுகளில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

iii. சோபினி ரூபா 12 வீதம் 1/2 டசின் கொப்பிகள் வாங்கினாள். சோபினி கொடுக்கவேண்டிய பணம் எவ்வளவு?

...................................................................

iv. 4325 ஐ எண் சட்டத்தில் காட்டுக




v. 23 ஐ உரோமன் இலக்கத்தில் எழுதுக.

vi. சோபினியின் அம்மா தம்பியைக் கூட்ட 12.45 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டார். பாடசாலை செல்ல 30 நிமிடம் எடுத்தது. அம்மா பாடசாலை அடைய எடுத்த நேரம் எவ்வளவு?.................................

vii. பெருக்கல் ❖ குறியீட்டினாலும் வகுத்தல் ≠ என்ற குறியீட்டினாலும் காட்டப்படும் எனில் 6❖ 3 ≠2 இன் பெறுமானம் யாது?

...................................................................

viii.

$$\begin{array}{r} 8324 \\ 330 \\ +\ 86 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8000 \\ -\ 3495 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 305 \\ \times\ 3 \\ \hline \\ \hline \end{array}$$

12 தரப்பட்டுள்ள உருக்களுக்குரிய பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

.......................... ..................

13 பின்வரும் சம்பவத்தை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வசனங்கள் எழுதுக. (பொருத்தமான எழுவாய் பயனிலையுடன்)

நான் எனது நண்பன் காந்தனுடன் பாடசாலைக்குப் புறப்பட்டேன். அன்று வெள்ளிக்கிழமை. பாடசாலை அண்மையில் உள்ளபடியால் நடந்து சென்றோம். நாம் வானத்தின் நிலையைக் கவனிக்காது குடை, மழைக்கோட் இன்றி புத்தகப் பையுடன் சென்றோம். சிறிது தூரம் சென்றபின் பலத்த மழை பெய்யத் தொடங்கியது.................................

...................................................................

...................................................................

இங்கே மடிக்கவும்

# வணிகக்கல்வியும் கணக்கீடும்

## க.பொ.த. சாதாரண தரம்

### மூலதனச் சந்தை
நீண்டகால மூலதனத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் சந்தை மூலதனச் சந்தை எனப்படும்.

### பங்குச் சந்தை
முதலீட்டாளர்கள் பட்டியலிட்ட கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்வதும் விற்பனை செய்வதும், நிகழக் கூடிய தளம் பங்குச் சந்தை எனப்படும்.

பட்டியலிட்ட பொதுக் கம்பனிகள் மூலதனத்தைப் பங்குச் சந்தை மூலமாகத் திரட்டிக் கொள்ளமுடியும்.

### ஊழியச் சந்தை
ஊழியர் தொடர்பாகக் காணப்படும் சந்தை ஊழியச் சந்தை எனப்படும்.

### சர்வதேசச் சந்தை
ஏற்றுமதி, இறக்குமதி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோ தொடர்புபடும் சந்தை சர்வதேச சந்தை எனப்படும்.

### சேவைச் சந்தை
நிதிச்சேவை, கைத்தொழிற்சேவை போன்ற சேவை பரிமாற்றப்படும் சந்தை சேவைச் சந்தை எனப்படும்.

### சந்தையொன்றின் முக்கியத்துவம்
1. நுகர்வோர் தேவைகளையும், விருப்பங்களையும் உச்ச அளவில் பூர்த்தி செய்வதற்கு சந்தை அவசியம்.
2. சந்தையை இலக்காகக் கொண்டே பெரும்பாலான உற்பத்திகள் நடைபெறுகின்றன.
3. நாம் கொள்வனவு செய்யும் பல பொருட்கள் சந்தையிலிருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றன.

## பண்டமாற்று முறை

### பண்டமாற்று
ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளைப் பரிமாற்றிக் கொள்ளுதல் பண்டமாற்று எனப்படும்.
(உ-ம்) நெல்லிற்காகத் துணியைப் பரிமாற்றிக் கொள்ளுதல்.
நெல்லிற்காக மட்பாண்டங்களைப் பரிமாற்றிக் கொள்ளல்

பண்டமாற்று முறையில் பல்வேறு வகையான சிரமங்கள் காணப் பட்டன. இச்சிரமங்களை நீக்குவதற்கு ஒரு ஊடகத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வூடகம் பணமெனப் புழக்கத்திற்கு வந்தது.

### பண்டமாற்று முறையில் காணப்பட்ட சிரமங்கள்
1. இரட்டைப் பொருந்துகை இல்லாமை
2. பெறுமதியை அளவிட அளவு கோல் இல்லாமை.
3. சிறு தொகையாகப் பிரிக்க முடியாமை.
4. சேமிக்க முடியாமை.
5. கொண்டு செல்வதில் சிரமம்.
6. கடன் கொள்வனவு விற்பனை செய்ய முடியாமை.

பண்டமாற்று முறைக்கு முற்பட்ட காலத்தில் வழக்கத்திலிருந்த தன்னிறைவுப் பொருளாதார முறையினை மாற்றத்துக்கு இட்டுச் சென்ற காரணிகள்.
1. மக்களிடையே ஏற்பட்ட சிறப்புத் தேர்ச்சி.
2. மேலதிகப்பொருள் உற்பத்தி.
3. குறித்த ஒரு பொருளை மாத்திரம் உற்பத்தி செய்தல்.

## பணப் பரிமாற்று முறை

### பணம்
பொருட்கள் சேவைகளைப் பரிமாற்றிக் கொள்வதற்காக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒன்று பணமாகும்.
நாட்டின் பிரதான வங்கியால் (*இலங்கை மத்திய வங்கி*) வெளியிடப் படும் பணம் எத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கும் இன்று சட் டப்படி அங்கீகரிக்கப்படுகின்றது. இது பணத்தின் சட்ட அங்கீகாரமென அழைக்கப்படும். சட்ட அங்கீகாரமுள்ள பணம் உலோக நாணயம், தாள் நாணயமென இருவகைப்படும்.

### பணத்தின் அபிவிருத்தியிலுள்ள பிரதான கட்டங்கள் (பணத்தின் வளர்ச்சிப்படி)
1. பண்டமாற்று முறையின்போது பயன்படுத்தப்பட்ட பொருட்கள் (சிப்பி, புகையிலை, மிருகங்களின் தோல்)
2. உலோகங்கள் பயன்படுத்தல். (*வெள்ளி, செப்பு, தங்கம்*)
3. குற்றி நாணயங்களும், தாள் நாணயங்களும் பயன்படுத்துதல்.
4. காசோலையின் பயன்பாடு.
5. இலத்திரனியல் பணப்பாவனை.

### பணத்தின் பண்புகள்
1. பொது அங்கீகாரம்.
2. இலகுவாக இனங்காணக் கூடிய தன்மை.
3. சிறிய அலகுகளாகப் பிரிக்கக்கூடிய தன்மை.
4. இலகுவாகக் கொண்டு செல்லக் கூடிய தன்மை.
5. போலிகளை உருவாக்க முடியாமை.
6. மிக நீண்ட காலத்திற்கு பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
7. ஒப்பீடுகையில் அருமையாக இருத்தல்

### பணத்தின் தொழிற்பாடுகள்
1. மாற்றூடகமாக தொழிற்படல்.
2. பெறுமதியை அளவிடும் அளவு கோலாகத் தொழிற்படல்.
3. பெறுமானத் திரட்டாகக் கருமம் ஆற்றுதல்.
4. பிற்போட்ட கொடுப்பனவுக்கு ஊடகமாகத் தொழிற்படல்.

### நாடுகளும் நாணயங்களும்

| நாடு | நாணய வகை |
|---|---|
| 1. இந்தியா | ரூபா |
| 2. சிங்கப்பூர் | டொலர் |
| 3. தாய்லாந்து | பாத் |
| 4. மலேசியா | றிங்கிற் |
| 5. ஜப்பான் | யென் |
| 6. அவுஸ்ரேலியா | டொலர் |
| 7. பிரான்ஸ் | யூரோ |
| 8. ஜேர்மனி | யூரோ |
| 9. ஐக்கிய ராஜ்ஜியம் | ஸ்ரேலிங்பவுண் |
| 10. அமெரிக்க ஐக்கிய குடியரசு | டொலர் |
| 11. குவைத் | றியால் |

## சந்தை முறைமை
நுகர்வோர் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்தலை நோக்கமாகக் கொண்டு சகல வியாபாரப் பணிகளும் நடைபெறுகின்றன வெனக் கூறமுடியும். உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்துதல் போன்ற யாவும் சந்தை மூலமாக தன்னிச்சையாகத் தீர்மானிக்கப்படுகின்றன. பொருட்கள் சேவைகள் சந்தை முறையின் கீழே உற்பத்தி செய் யப்படுகின்றன. சந்தை முறைமைக்கு இடையூறான அம்சங்களை நீக்கச் சுதந்திரமான சந்தை முறையை நோக்கி பல நாடுகள் நடைபோடுகின்றன. அதேபோன்று பிராந்திய வர்த்தகக் கூட்டமைப்புக்களும் உருவாகின்றன. இலங்கையிலும் திறந்த சுதந்திரமான சந்தை முறைமை நடை முறையிலுள்ளது.

### திறந்த சந்தை முறையின் அனுகூலங்கள்
1. கிடைக்கக் கூடிய வளங்கள் முழுமையாகவும், திறமையாகவும் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.
2. போட்டி நிலை காணப்படும்.
3. பொருட்களின் விலை குறையும்.
4. நுகர்வோர் தாம் விரும்பிய பொருட்களை நுகரக் கூடிய வாய்ப்பு.
5. உற்பத்தியில் புதிய கண்டுபிடிப்புகள் ஏற்படல்.
6. உலகமயமாதல்.

### பிராந்திய சந்தை அமைப்புக்கள்
உதாரணம் 1. ஐரோப்பிய பொதுச்சந்தைக் கூட்டமைப்பு
2. தெற்காசிய முன்னுரிமை வர்த்தகம் ஒப்பந்தம்

தம்பித்துரை பாலகிருஷ்ணன்
(வளவாளர் - வணிகக்கல்வி, தென்மராட்சி கல்வி வலயம்
ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

இங்கே மடிக்கவும்

14. படத்தை பார்த்து வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.




15. தோடம்பழத்துக்கும் மாம்பழத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம்
(1) பாரம் (2) உருவத்தில் (3) நிறத்தில்




16. பிளாஸ்டிக் போத்தலுக்கும், கண்ணாடி போத்தலுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.
(1) உருவத்தில் (2) பாரத்தில் (3) உயரத்தில்




17. வாழைப்பழத்துக்கும், வாழைக்காய்க்கும் இடையே உள்ள வித்தியாசம்
(1) நிறை (2) நிறம் (3) உருவம்




18. காகத்திற்கும் குயிலுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்
(1) நிறம் (2) உருவம் (3) ஒலி

19. கீழே உள்ள பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

சேவல் கூவி வாழ்ந்த
சோலைக்குயில் பாட
ஆவலுடன் கிழக்கில்
ஆதவனும் வந்தான்

20. இப்பாடலில் கூறப்படும் பொழுது?
(1) மாலைப்பொழுது (2) பகற்பொழுது (3) காலைப்பொழுது

21. ஆதவனும் வந்தான் என்பதில் ஆதவன் என்பது?
(1) சிறுவன் (2) ஞாயிறு (3) மனிதன்

22. வந்தான் என்னும் சொல் காட்டும் காலம்?
(1) நிகழ்காலம் (2) இறந்த காலம் (3) எதிர்காலம்

♦ இல. 23 -25 வரை உள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு சமனாக கருத்துடைய விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

23. தேவனுடைய வாகனம் அடிக்கடி இடையிலே நின்றுவிடும்?
(1) தேவனுடைய வாகனம் உடைந்தது
(2) தேவனுடைய வாகனம் அடிக்கடி வீதியில் செல்லும்
(3) தேவனுடைய வாகனம் பழையது

24. பசுக்கன்று அடிக்கடி கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடும்?
(1) பசுக்கன்று குறும்புத்தனம் உடையது
(2) பசுக்கன்று அவசர புத்தியுடையது
(3) பசுக்கன்று சாதுவானது

25. எதிரே உள்ள பள்ளத்தில் வாகனங்கள் அடிக்கடி தடம்புரளும்?
1) பள்ளத்தில் வாகனம் செல்ல முடியாது
2) பள்ளம் அபாயகரமானது 3) பள்ளம் ஆழமானது

♦ இல. 25-30 வரை உள்ள வினாக்களில் பிழையற்ற விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

26. கடும் மழையினால் ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. உடனடியாக நடக்கப்போவது?
(1) வீதிகளும், வீடுகளும் தாழப்போகின்றன.
(2) ஆற்று நீர் வெளியே பாயப் போகிறது.
(3) முதலுதவி சேவை வரப்போகிறது.

27. இம்முறை குமரனுடைய வயலின் நல்ல விளைச்சல் பெறப்பட்டது?
(1) வயல் சிறியதாக இருந்தமையாகும்.
(2) செயற்கை உரத்தை பயன்படுத்தியமை ஆகும்.
(3) குமரன் வயலை நன்று கவனித்தமையால் ஆகும்.

28. மின்சாரம் தடைப்பட்டால் உடனடியாக செய்ய வேண்டியது?
(1) மின்சாரத் தடைக்கான காரணத்தை தேடிப்பார்க்க வேண்டும்.
(2) வெளிச்சத்தை பெறக்கூடிய பொருளை பெற வேண்டும்.
(3) மின்சாரத்தைப் பெறும் வழியை அறிய வேண்டும்.

29. கடதாசியின் விலை திடீரென குறைந்தால்?
(1) மக்கள் துணிக்குப் பதிலாக கடதாசியை பாவிப்பார்கள்.
(2) புத்தகங்கள் விலை குறையும்.
(3) வியாபாரிகள் கடதாசி விற்பனையை நிறுத்தி விடுவார்கள்.

30. வர வர பஸ் வண்டிகளில் ஜன நெருக்கம் அதிகரிக்கின்றது? காரணம?
(1) பஸ் வண்டிகள் குறைவானதால் ஆகும்.
(2) புகை வண்டியை விட பஸ் வண்டிப் பிரயாணம் வசதியானதால் ஆகும்.
(3) பஸ் பிரயாணிகள் அதிகரித்ததால் ஆகும்.

♦ இல. 31-36 வரையுள்ள வினாக்களில் உள்ள கூற்றுக்கள் எப்போதும் உண்மையாக இருக்குமெனின் சரி (√) எனவும் சில வேளைகளில் மாத்திரம் உண்மையாக இருக்குமெனின் பிழை (✗) எனவும் எழுதுக.

31. வானம் நீல நிறமாக இருக்கும். (..........)
32. சூரியன் மேற்குத்திசையில் மறையும். (..........)
33. வானத்தில் நட்சத்திரங்கள் உள்ளன. (..........)
34. பால் வெள்ளை நிறமுடையது. (..........)
35. தாவரங்கள் எல்லாம் பச்சைநிறமுடையது. (..........)

♦ பின்வரும் சுருக்க குறியீடுகளை விரித்து எழுதுக

36. அ.ப. .. ..............................................................

37. தே.க.நி..............................................................

38. IV, XII, XIX என்னும் எண்களை ஏறு வரிசையில் எழுதுக
..............................................................

♦ கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| A | K | B |
| S | O | V |
| M | R | N |

A கிணறு V பூங்கா
K மரம் M பாடசாலை
B வீடு R பஸ் நிலையம்
S கடை N பள்ளி
O கோயில்

39. கோயிலுக்கு எந்த திசையில் கிணறு உள்ளது? ..........................
40. பாடசாலைக்கு ஈசான்மூலையில் அமைந்திருப்பது எது?..........................
41. கிணற்றுக்கு எந்த திசையில் கோயில் உள்ளது?..........................
42. வீட்டுக்கு எந்தத்திசையில் பாடசாலை உள்ளது?..........................
43. பள்ளிக்கு எந்த திசையில் கிணறு உள்ளது?..........................
44. பூங்காவுக்கு எந்த திசையில் பள்ளி உள்ளது?..........................
45. கோயிலுக்கு நிருதி மூலையில் அமைந்திருப்பது யாது?..........................

♦ இல. 34-37 வரை உள்ள வினாக்களில் உள்ள படங்களில் ஒன்று வித்தியாசமானது அதன்கீழ் கோடிடுக.

46.



47.



T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்





இங்கே மடிக்கவும்

# க.பொ.த. சாதாரண தரம் -2004 தமிழ்மொழியும் இலக்கியமும்

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. அரிச்சந்திரன் கான்முளை பற்றி எறிந்தான். இதில் கான்முளை என்பதன் கருத்து.
 1)பயிர் 2)குழந்தை 3)யாக்கை 4)பிணம்
2. ஆர்வலர் புண்கனீர் பூசல் தரும் இதில் ஆர்வலர் என்பதன் கருத்து.
 1)ஆய்வாளர் 2)அந்தகர் 3)அன்புடையோர் 4)அன்பற்றோர்.
3. இன்று இன்ரநெட்(Internet) மூலம் பல தகவல்கள் பெறக்கூடியதாக உள்ளது. இன்ரநெட என்பதன் பொருத்தமான தமிழ்சொல் யாது?
 1)இணையம் 2)கணினி 3)மின்னஞ்சல் 4)தொலைநகல்
4. நவீன யுகத்தில் விஞ்ஞானம் சாதனை புரிகின்றது. நவீனம் என்பதன் எதிர்க்கருத்து?
 1)புதுமை 2)நவம் 3)புராதனம் 4)பிந்திய
5. பேச்சுக்களின்போது இணக்கம் எதுவும் ஏற்படவில்லை இணக்கம் என்பதன் எதிர்ச்சொல்
 1)சுணக்கம் 2)பிணக்கம் 3)களங்கம் 4)தயக்கம்

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட பகுதியை நிரப்புவதற்கு சரியான சொல்லைத் தெரிவுசெய்க.

6. மக்கள் தமது உரிமைகள் மறுக்கப்படும் போது செய்வர்.
 1)ஆரவாரம் 2)ஆர்ப்பாட்டம் 3)ஆய்வு 4)உறுதி';ரை
7. எண்பதாம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா?
 1)பொன்விழா 2)வைரவிழா 3)மணிவிழா 4)அமுதவிழா
8. நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கும்படி நீதிபதி சாட்சிக்கு ......... விடுத்தார்.
 1)அழைப்பு 2)மறுப்பாணை 3)அழைப்பாணை 4)அறிக்கை
9. சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுமென அரசியல் யா[illegible]ல் ........... அளிக்கப்பட்டது.
 1)உத்தேசம் 2)உத்தரவாதம் 3)பிரசித்தம் 4)நிபந்தனை
10. நாடாளுமன்றில் புதிய திட்டங்கள் பற்றி ............. முன் வைக்கப் பட்டது.
 1)விதம்புரை 2)பிரேரணை 3)பாதீடு 4)அழைப்பாணை

பின்வரும் வினாக்களில் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

11. நறவு, தேறல், நறை என்ற பொருள் தரும் ஒரு சொல்
 1)மோர் 2)தேன் 3)பால் 4)நெய்
12. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் தொகைப்பெயர்?
 1)நால்மார்க்கம் 2)சதுர்மறை 3)புருடார்த்தம் 4)நால்வழி
13. நூலாசிரியர் தனது நூலைப்பற்றி நூல் முகப்பில் எழுதும் உரை.
 1)பதிப்புரை 2)ஆய்வுரை 3)நூன்முகம் 4)அணிந்துரை
14. வாழையின் இளங்காய்
 1)மூசு 2)வடு 3)கச்சல் 4)பிஞ்சு
15. விலங்குகள் இயற்கையான சூழலில் வாழ்கின்ற பாதுகாப்பான இடம்.
 1)வியக்கம் 2)காப்பரண் 3)ஆரணியம் 4)பகலரண்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. ஒரு விடயத்தை உடனே செய்யாமல் நாளைக் கடத்துவதைக் குற'க்கும் மரபுத் தொடர்.
 1) இழுத்தடித்தல் 2) பறையடித்தல்
 3) தட்டிக் கழித்தல் 4) ஆறப்போடுதல்.
17. அவன் எவர்க்குமே பயப்படாத உதவாக்கரை என்பதன் கருத்து.
 1) பயனற்றவன் 2)குறும்புக்காரன்
 3) திறமையற்றவன் 4). கோபக்காரன்.
18. ஒரு செயலைச் செய்யும் போது அந்த செயலுக்கு இடையூறாக இன்னொரு சம்பவம் நடந்து கொள்ளல் என்பதைக் குறிக்கும் உவமைத்தொடர்.
 1)சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பு போல
 2)சேற்றில் முளைத்த செந்தாமரை போல
 3)நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல
 4)கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல.
19. சிறுவயதிலேயே பழகிய பழக்கம் வயது சென்றாலும் பயன்படும் என்பதைக் குறிக்க வழங்கும் பழமொழி
 1)துள்ளின மாடு பொதி சுமக்கும்
 2)தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்.
 3)சூடு காண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
 4)தூணலும் தன் வாயாற்கெடும்.
20 காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழியின் கருத்து
 1)காற்று மனித வாழ்வில் முக்கியமானது.
 2)காற்று உள்ள போது ஒருவரை பேசுதல் வேண்டும்.
 3)காற்று உள்ள போது ஒருவரை அழைத்தல் வேண்டும்.
 4)சந்தர்ப்பம் கிடைக்கும் போது செயற்பட வேண்டும்.

- பின்வரும் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. இறுதியில் வராத எழுத்து.
 1)அ 2)ள் 3)ண் 4)ம்
22. பகுதி இரட்டித்து காலங்காட்டுவதற்கு உதாரணம்.
 1)உண்டான், கண்டான் 2)புக்கான், விட்டான்
 3)வாழ்க, வீழ்க 4)உண்பான், பாடுவான்.
23. பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வரக்கூடிய ஒரு சொல்
 1)ஆடு 2)காடு 3)பாடு 4)வீடு
24. என்னை என்ற சொல்லில் வேற்றுமை உருபேற்ற பெயர்.
 1)தன்மைப் பெயர் 2) முன்னிலைப் பெயர்
 3)படர்க்கைப் பெயர் 4) எவையுமில்லை
25. வேடர்களை சொல்விளம்பி என அழைத்தல்
 1)இலக்கணப்போலி 2)மரூஉ 3) இடக்கரடக்கல் 4)குழுகுக்குறி
26. மலர் விழி என்பது
 1)வினைத் தொகையாகவும் வேற்றுமைத் தொகையாகவும் வரும்.
 2)வினைத் தொகையாகவும் பண்புத் தொகையாகவும் வரும்.
 3)வேற்றுமைத் தொகையாகவும் உவமைத் தொகையாகவும் வரும்.
 4)வினைத் தொகையாகவும் வேற்றுமைத் தொகையாகவும் வரும்.
27. கலாசாரம் என்பதைப் பிரித்து எழுதினால்
 1)கலா + சாரம் 2)கலை + சாரம் 3)கலா + சரம் 4)கலை + சரம்
28. வள்ளுவரால் திருக்குறள் எழுதப்பட்டது. இதில் எழுதப்பட்டது என்பது.
 1)செய்வினை 2)செயற்பாட்டு வினை 3)தன்வினை 4)பிறவினை
29. தரப்பட்ட சொல்வரிசையில் பொருந்தாத சொல் இடம் பெறும் வரிசை
 1)பெயர்- அணில், விசில்,தவில் 2)வினை- நட, போ, வா, இரு
 3)இடை- ஐ.ஆல், ஒடு,ஓடு 4)உரி - கால, உறு, தவம், நனி
30. சரியான குறியீடுகள் இடம் பெறாத வாக்கியம்.
 1)கமலா! ஏன்? வந்தாய் என்றாள் 2)கமலா ஏன்? வந்தாய் என்றான்
 3)கமலா ஏன்? வந்தாய் என்றாள்? 4)கமலா ஏன் வந்தாய்? என்றாள்.

பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றுக்கும் சரியாக முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க. - அவனின் மனம் அச்சத்தால்
 1)வெடுவெடுத்தது 2)குடுகுடுத்தது 3)படபடத்தது 4)குறுகுறுத்தது.
31. நீயும் நானும்.
 1)போவோம் 2)போவீர் 3)போனாய் 4)போனேன்
33. வழக்கறிஞர் எடுத்துக் காட்டிய நியாயங்கள் ஒவ்வொன்றும்
 1)பொருத்தமானதாக இருந்தது 2)பொருத்தமானவையாக இருந்தன
 3)பொருத்தமானதாக இருந்தன 4)பொருத்தமானவையாக இருந்தது.
34. எப்படித்தான் தடுத்தாலும் தீயோர் தாம் நினைத்ததைச்
 1)செய்யாமல் விடுவர் 2)செய்யாமல் விட்டார்
 3)செய்யாமல் விடுகிறார் 4) செய்யாமல் விடார்.
35. கடவுளை நம்பிநோர்க்கு துன்பங்கள்
 1)அனுகும் 2)அனுகா 3)அனுகாது 4)அனுக மாட்டாது.
36. பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய
மாட்டாதான் நல்லமரம்.

இப்பாடலில் கவிஞர் குறிப்பிடும் கருத்து
 1)கல்வியின் அவசியம் 2)கல்லாமையின் இழிவு
 3)மரத்தின் சிறப்பு 4)சபையின் சிறப்பு

பூ. நகுலன் B.A

இங்கே மடிக்கவும்

# மட்டுவில் அன்னமார் ஆலயத்தில் பழமை வாய்ந்த விக்கிரகம் மீட்பு!

மட்டுவில் வடக்கு முசுறிப் பகுதியில் அமைந்துள்ள "அன்னமார்" ஆலயத்திருந்து 100 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த அம்மன் விக்கிரகமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வருடாந்தப் பொங்கல் நிகழ்வின்போது, இந்த ஆலயப் பூசகர் கலையாடி இந்த விக்கிரகம் இருந்த இடத்தை அடையாளங் காட்டி எடுக்குமாறு கூறினார். இதையடுத்து அந்த இடத்தை அகழ்ந்த போது, ஐம்பொன்னாலான மிகச் சிறிய அம்மன் விக்கிரகம் வெளிப்பட்டது.

இந்த இடத்திலேயே உடனடியாக அந்த விக்கிரகத்தைப் பெருமளவிலான பக்தர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த ஆலயச் சூழலில் மேலும்-ஒரு விக்கிரகம் காணப்படுவதாகவும், அது வரும் சனிக்கிழமையன்று வெளிப்படும் எனவும் பூசகர் தெரிவித்தார். (24)

## நெடுந்தீவு மரியன்னை ஆலய திருநாள் திருப்பலி

நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் உள்ள புனித மரியன்னை ஆலயத்தில் ஜூலை 2ஆம் திகதி காலை 6 மணிக்கு திருநாள் திருப்பலி வெகுசிறப்பாக இடம்பெறவுள்ளது. (113)

## வருடாந்த மஹோற்சவம்

வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஜூலை மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

20 திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.




*ஆக் சிறுவர் இல்லத்தில் கியூடெக் நிறுவன சமாதானக் குழுவினர் மேற்கொண்ட கலந்துரையாடல் கருத்தமர்வில் டொக்டர் பிறிட்டோ மற்றும் சமாதானக் குழுவினரை படத்தில் காணலாம்.* (91)

# இனத்தின் அடையாளங்களை அழித்துவிட்டு விடுதலைக்காக போராடுவது வெட்கப்படத்தக்கது

## தமிழில் பெயர் சூட்டிய பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வில் புதுவை

இந்துக் கடவுள் பெயர்களை தமிழ் பெயர்கள் என்று மயங்குகின்றோம். தமிழாகிவிட்ட பெயர்களை தமிழ்ப் பெயர்கள் என்று இருக்க முடியுமா? இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் கவிஞனும் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கேள்வி எழுப்பினார்.

கனடா சிலம்பம் அமைப்பின் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் சூட்டிய பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றினை நடத்தினர். இதில் 82 பெற்றோர்களுக்கு பணப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கவிஞர் புதுவை இந்த நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

எந்த மொழிச்சொல் என்று தெரியாமல் பெயர் சூட்டுவதற்கு தமிழர்களாகிய நாங்கள் முன்வந்துள்ளோம். இதற்கு காரணம் எண்சோதிடர்களே. அவர்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காக மொழிக்கு முன்வராத எழுத்துக்களைக் கொண்டு பெயர் சூட்டுமாறு கூறுகின்றனர்.

இவர்களின் நடவடிக்கை தமிழ் மொழிக்கு மிகுந்த அழிவைத்தர தக்கவையாக இருக்கின்றன.

நல்லன செய்பவர்கள் வெளியே தெரிவதில்லை. விளம்பரங்கள் அவர்களின் செயல்களை மறைத்து விடுகின்றன. மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ்பாணத்தில் இவ்வாறான ஒரு நிகழ்வு நடத்தப்பட்டது. இதில் 50 பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இதன் விழிப்புணர்ச்சியை தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் கணிசமான இளைஞர்கள் வழிதவறிச்சென்று கொண்டிருக்கின்றார்கள். இவர்களால் அமைதியான சமுதாயம் கட்டி எழுப்பப்படுமா என்றில்லை. எண்சோதிடர்களின் அபத்தமான நடவடிக்கை தமிழ் மொழியை கீழ் நோக்கி கொண்டு செல்கின்றது. தமிழ் இப்போது அழுது கொண்டிருக்கின்றது. அழும்நிலைக்குத் தமிழ் வந்துவிட்டது. தமிழில் கவிதை எழுதும் கவிஞர்களின் பிள்ளைகளுக்குகூட தமிழில் பெயர்கள் இல்லை. முடிந்தளவு தமிழில் பெயர்கள் சூட்டுவதற்கு முனைய வேண்டும். இந்த அவலம் தொடருமானால் மோசமான பக்க விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம்.

மாவீரர்கள் வெறும் மண் மேட்டுகளாக சாகவில்லை. அவர்களுக்குள்ளும் தமிழீழத்தில் தமிழ் நிலைக்க வேண்டும் என்ற கனவு இருந்தது. தமிழீழ கலை பண்பாட்டுக் கழகம் வெறும் அடிப்படைவாத அமைப்பு அல்ல. மாற்றங்களையும் விரும்கின்றது. தேவை வரும்போது மாற்றங்கள் வரும். விடுதலைப் புலிகளின் மாற்றப்பாட்டுக்கு நியாயம் இருக்கின்றது. மாற்றங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். நவீன உலகிற்கு ஏற்ப பயணம் செய்ய வேண்டும். இனத்தின் அடையாளங்களை அழித்து விட்டு விடுதலைக்காக போராடுவது வெட்கப்படத்தக்கது எனத் தெரிவித்தார். (04)

## வீதிகளைப் புனரமைக்க நிதியொதுக்கீடு

(ஆழியவளை)

வடமராட்சிப் பிரதேசத்தில் -உள்ளூராட்சிச்சபைகள் ஊடாக இரண்டு வீதிகளைப் புனரமைப்பதற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சு நிதிவழங்கியுள்ளது.

பருத்தித்துறை நகரசபைப் பிரதேசத்தில் 4ஆம் குறுக்குத்தெரு கடற்கரை வீதி, கரவெட்டி பிரதேச சபைப்பிரிவில் கரணவாய் மத்தி சோதி வீதி, ஆகியன ஜூலை மாதமளவில் புனரமைக்கப்படவுள்ளன. (122)

## கண்ணகை விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதிக்கு விண்ணப்பிக்கலாம்

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் 2004ஆம் ஆண்டுக்கான நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன. வலி. தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஏ,பி தரங்களையுடைய சனசமூக நிலையங்கள் எதிர்வரும் ஜூலை 5 திகதிக்கு முன்னர் விபரங்களை அனுப்பி வைக்குமாறு பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

இதில் சனசமூக நிலையங்களில் பெயர், முகவரி, கிராம சேவையாளர் பிரிவு, பதிவு இலக்கம், விளையாட்டுக் கழகங்களின் விபரம், முன்பள்ளி தொடர்பான விபரம், அங்கத்தவர்களது எண்ணிக்கை போன்ற விபரங்கள் கோரப்பட்டுள்ளன. இவற்றை உரிய முறையில், உரியபடிவங்களில் அனுப்பி வைக்குமாறு மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் விக்டர் கேட்டுள்ளார். (91)

# பதிவாளரது கடமைகளை யாரும் பொறுப்பேற்கவில்லை

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரது கடமைகளை இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பதிவாளர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் சுற்றுப் பயணத்திற்கான, கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் முறைகேடாக நடந்து கொண்டார் என, கல்வி சார ஊழியர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இந்த நிலையில் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ். பல்கலைக்கழக பேரவை விசாரணைகள் முடியும்வரை பதிவாளரைத் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்திருந்தது

ஆனாலும், இதுவரையில் தற்காலிகமாக பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ள பதிவாளரது கடமைகளைப் பொறுப்பேற்க எவரும் நியமிக்கப்படவில்லை.

# தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை செப்ரெம்பர் மாதமளவில் திறக்கப்படும்

(உடுவில்)

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் திறக்கப்படவிருப்பதாக தெரியவருகின்றது.

இதில் பணிபுரிவதற்கு 6 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மூவரும், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் இருந்து மூவரும், தெரிவுசெய்யப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

இவர்கள் பயிற்சியை முடித்துக்கொண்டதும், தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் தமது கடமையைக் பொறுப்பேற்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (101)

# சின்னஞ் சிறு செய்திகள்

## "தெரிதல்" இதழ் வெளியாகியது

(கொக்குவில்)

இலங்கிய விமர்சகர் அ.யேசுராசாவின் "தெரிதல்" இதழின் ஜூன், ஜூலை இதழ் வெளிவந்துவிட்டது.

"படிப்பகம், ஜனரசங்கப் போலிகள், தகவற்களம், பகிர்வு ஆகிய பகுதிகளுடன் "இருநாடகங்கள் ஒரு நாட்டுக்கூத்து", "அகாலத்தில் மறைந்த செ.கதிர்காமநாதன், இலக்கியப்பேரவையின் 1997-2002) பரிசளிப்புவிழா, கனவு மெய்படவேண்டும்" ஆகிய ஆக்கங்களுடன் வெளியாகியுள்ளது. (206)

## ஆனி மாதக் கலைவிருந்து

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆனி மாதக் கலைவிருந்து இன்று மாலை 4 மணிக்கு, புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நுண்கலைக் கல்லூரி மாணவர்களான இதயராஜ், சுடர்விழி, கோமகன் ஆகியோரின் தாளவாத்தியக் கச்சேரியும், சங்கீதபூஷணம் பி.குமாரசாமியின் சிறப்புத் தமிழிசை விருந்து நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

## மஹாகும்பாபிஷேகம்

(மட்டுவில்)

சரசாலை தெற்கு மகிழ்நின்ற வளவு அருள்மிகு இராமாவில் பிள்ளையார் ஆலய பஞ்சகுண்டபட்ச மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.10 முதல் 12 மணிவரையான சுபமுகூர்த்தத்தில் சிவஸ்ரீ ந. இராகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர் குழுவினரால் நடாத்தி வைக்கப்படும்.

முதல் நாள் 7ஆம் திகதி காலை 8 மணிமுதல் 4 மணிவரை எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். கும்பாபிஷேக தினத்தன்று நல்லைக்குருமணி சோமசுந்தர தேசிக சுவாமிகளது அருளுரையும், சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுவாமிகளது வாழ்த்துரையும், சிவத்தமிழ்ச் சொல்லழகர் எஸ். லலீஷனின் விதப்புரையும் இடம்பெறும். (24)

## வீதிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளருக்கு கடிதம்

குருநகர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்துக்கின்ற வீதிகளையும் மற்றும் வடிகால்களையும் துரிதகதியில் புனரமைப்புச் செய்து மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஜே/70 கிராமிய சமுர்த்திச் செயலணியால் மாநகர சபை ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## பொது அறிவுப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(ஆழியவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினரும், பளைப்பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து, பாடசாலை மாணவர்கள் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்கு இடையே பொது அறிவுப் போட்டிகளை நடாத்தவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பிரதேச சபையில் பெற்று, இந்தமாத முடிவுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் அடுத்தமாதம் 10ஆம் திகதி நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

## பயிற்சியை முடித்த ஆசிரியர்கள் கடமை பொறுப்பேற்பு

(ஆழியவளை)

பலாலி கோப்பாய், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிகளை முடித்த ஆசிரியர்கள் எதிர்வரும் முதலாம் திகதி பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இந்த ஆசிரியர்கள் தாங்கள் முன்னர் கடமைபுரிந்த கல்வி வலயங்களுக்கே நியமிக்கப்படவுள்ளனர். வலயக்கல்விப் பணிப்பாளர்கள் பொருத்தமான பாடசாலைக்கு நியமிப்பார்.

இந்த ஆசிரியர்களுக்கான இறுதி ஆண்டுப்பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறும் என ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### ஐந்தாவது அகவையில்



பெயர் : ச. இலட்சிகா
முகவரி : சுவிற்சர்லாந்து

### ஏழாவது அகவையில்



பெயர் : ந. ரம்மியா
முகவரி : சுவிற்சர்லாந்து

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பாக

யாழ்.ராதவல்லி



# மனித குலத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கும் சுற்றுச்சூழல் மாசடைதல் பிரச்சினைகள்

**உலகின்** சுற்றாடல் தனிமனிதனுக்கோ, தனியொரு நாட்டிற்கோ உரியது அல்ல. இந்த உண்மையை உலக மக்களோ, உலக நாடுகளோ இதுவரை உணரவில்லை. வரப்போகும் காலத்திலாவது சுற்றாடலானது மனித இனம் முழுவதற்குமே உரியதாகும் என்ற உண்மையை உணர்ந்து நாம் வாழும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக்கொள்வதும், சுற்றுச்சூழலில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளைத் தவிர்த்துக் கொள்ளுதலும் மனிதர்கள் அனைவரினதும் இன்றியமையாத கடமையாகவும் உள்ளது.

தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இடம்பெறும் மிகப்பெரியளவிலான நுகர்வினால் ஏற்படும் கழிவுகள் - வளரும் நாடுகளின் சுற்றாடலை பாதிப்புக்குள்ளாக்குகின்றது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். சுற்றாடலைப் பாதுகாக்கும் பொறுப்பானது மனிதனது கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கடமையை உணர்ந்து செயற்படும்போது சுற்றாடல் பாதுகாக்கப்படுவதோடு, உயிர்கள் அழிக்கப்படுவதும் தடைசெய்யப்படுகின்றது. அத்துடன், உலகமும் முன்னேற்றப்பாதையில் வீறுநடை போடுகிறது.

*தொழில்நுட்ப முன்னேற்றம் இயற்கை அமைப்புக்கள் மீது மட்டுமன்றி, நம் சமூக அரசியல் அமைப்புக்கள் மீதும் ஏற்படுத்தும் பாதிப்பை நாம் உணர்கின்றோம். நமக்கு வெளிப்படையாக கவலை தருவது சுற்றாடல் பிரச்சினை ஆகும். மோட்டார் வாகனங்களின் பாதிப்பும், குளிர்சாதனப் பெட்டிகளின் பாதிப்பும், அணு ஆற்றல் உலைகளை நிர்வகிப்பதிலும், அணுக் கழிவுகளை அப்புறப்படுத்துவதிலும் உள்ள பிரச்சினைகள் நமக்கு சுற்றாடல் குறித்த கவலையைத் தருகிறது.*

சுற்றாடலைப் பாதுகாப்பது உலக மக்களின் பொறுப்பு. இந்த வகையில் கைத்தொழில் நாடுகளின் சூழல் பிரச்சினைகள் பற்றி நோக்குவோம் - கைத்தொழில் நாடுகள் ஏதாவது 'ஒரு விடயம் பற்றி 3 ஆம் உலக நாடுகளுடன் கலந்துரையாட விரும்பின் அது சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான விடயமாகவே இருக்கும்.

பூகோள வெப்பநிலை மாற்றமும், வேறுசில காரணங்களும் பூகோளத்திற்கு அபாயத்தையும், பயமுறுத்துதலையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த அபாயமும் பயமுறுத்துதலும் கைத்தொழில் நாடுகளாலேயே ஏற்பட்டுள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. 3 ஆம் உலக நாடுகளும் இதே மாதிரியான அபிவிருத்திப் பாதையில் செல்லும்போது உலகச் சுற்றாடல் ஒழுங்கில் ஏற்படும் சுமை, தாங்முடியாத அளவுக்கு ஏற்பட்டு, பூகோளத்தையே பாதித்துவிடும்.

சுற்றாடலும் அபிவிருத்தியும் பற்றிய "புறூண்லண்ட் ஆணைக்குழுவினர் (Brundtland Commission) அபிவிருத்தி மட்டுமன்றி வறுமையும் உலக நாடுகளில் சுற்றாடலினால் அபாயம் ஏற்படுவதற்கு காரணமாக உள்ளன எனக்குறிப்பிட்டுள்ளனர்.

வறிய மக்கள் எரிபொருளின் விலைகளைத் தாங்கமுடியாவிடில் காடுகளை அழிப்பர். ஆபிரிக்க நாடுகளில் கால்நடைகளை ஓர நிலங்களில் புல்மேய விடுவதனால் நிலம் தரிசாகவும், உப்புத்தன்மை உடையதாகவும் மாறிவருகின்றது. வறுமை காரணமாக கிராம மக்கள் வேலை தேடிக்கொண்டு பட்டணங்களுக்குச் செல்வதனால், நகரங்களில் சேரிகள் உண்டாவதையும் மற்றும் சமூக அரசியல் அமைதியின்மை தோன்றுவதனையும் நாம் காணலாம்.

எனவே, பொருளாதார வளர்ச்சிதான் சூழலை மாசுபடுத்தியும், சேதமுண்டாக்கியும் வருகிறது எனக் கூறிவிடமுடியாது. வறுமையும் வளர்ச்சியின்மையும்கூட சுற்றாடல் மாசடையக் காரணமாகின்றது. எனினும், வறிய நாடுகளும் அபிவிருத்தி அடையவேண்டும். ஆனால், அவை தொடர்ந்து பேணக்கூடியதும் காலப்போக்கில் பாதகமான விளைவுகளைக்கொண்டுவராமல் இருக்கக்கூடியதுமான (அதாவது சுற்றாடலை மாசடையச் செய்யாதனவாக) அபிவிருத்தி மாதிரிகளைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

சூழலுக்குப் பொருத்தமான அபிவிருத்தி தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் பல்வேறு பிரிவுகள் சக்தி சம்பந்தமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஆகிய செலவுகளை அதிகரிக்கச் செய்வனவாகும். மோட்டார் வாகனங்கள்மூலம் ஏற்படும் மாசடைதலைக் குறைக்கவேண்டுமாயின் இப்போது ஐரோப்பாவில் நடைபெறுவதைப்போன்று வாகனங்களில் கற்றலைசர்களைப் (Catalysers) பொருத்துதல் வேண்டும். இது ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், கைத்தொழில் நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் சூழல் மாசடைதலைக் குறைக்கவேண்டுமாயின், அது பெரியளவில் செலவை ஏற்படுத்தும் 3 ஆம் உலக நாடுகள் அதிகரித்துவரும் தம் மக்கள் தொகையை, குடியேற்ற காடுகளை வெட்டுவதனைத் தவிர்க்கவேண்டுமாயின் அம்மக்களைக் கைத்தொழில் முதலியவற்றில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால், இந்த மாற்றுவழி அதிக செலவை உண்டாக்கும்.

எனவே, பேணக்கூடிய அபிவிருத்திக்கு அதிக செலவுகள் உண்டாகும். அத்துடன் அதிக வளங்கள் தேவைப்படும். எனவே இத்தகைய அபிவிருத்தியை ஏற்படுத்தவேண்டுமாயின், "சர்வதேச நாணயமுறைமை முழுவதையும் மாற்றியமைத்து 3 ஆம் உலக நாடுகளுக்கு பெருமளவான வளங்களை மாற்றி அந்நாடுகளை வளரச்செய்தல்வேண்டும்"

இவ்வாறு செய்வதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதுடன் அதற்குச் சேதம் ஏற்படுவதனைத் தடைசெய்யவும் கூடியதாக இருக்கும்.

உலகின் தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள பிறேசில் எனும் நாட்டில்தான் உலகில் உள்ள மழைக்காடுகளில் ஏறத்தாழ அரைப்பகுதி அங்கேதான் உள்ளது. அந்த நாட்டின் சிறப்பை "அத்திலாந்திக் கரையோரங்களில் உள்ள மழைக்காட்டு மரம் ஒன்றில் குரங்கு ஒன்று ஏறினால் நெருங்கிவளரும் மரங்களில் அது தாவித்தாவி கரைக்கு இறங்காமலேயே பசுபிக் கரையோரக் காடுகளில்போய் அடையக்கூடிய நிலை தற்போது உண்டு" என்கின்றனர்.

இக்கட்டுரைத் தொடர் தற்போது வாழ்ந்துவரும் மனித சமுதாயத்திற்கும் எதிர்வரும் யுகங்களில் தோன்ற இருக்கும் சமுதாயங்களுக்கும் உரியது மட்டுமல்ல, சூழலைப் பாதுகாக்க இயங்கும் இன்றியமையாத ஒரு தொகுதியாகவும் உள்ளது. தென் அமெரிக்காவில் வாழும் மக்கள் 3 ஆம் உலக நாட்டு மக்களாவர். வறுமையில் வாடுவோர்கள். இவர்கள் முன்னேற வழியில்லை.

எனவே அந்நாட்டு அரசும் சரி, மக்களும் சரி நாடும் அதன் வளங்களும் தமக்குரியன எனக்கூறி அவற்றைத் தீக்கிரையாக்குகின்றனர்.

அதன் காரணம் விவசாயம் செய்து முன்னேறலாம் என்பதாகும். ஆனால், அம்மழைக்காடுகள் உலகச் சுற்றாடல் முழுமைக்கும் சொந்தமாகும்.

காடற்ற பூமி விவசாயிகளுக்கு உகந்ததன்று. காட்டை அழிப்பதால் மறைவது ஆயிரக்கணக்கான தாவர, விலங்கு இனங்களேயாகும். ஆனால், அவர்கள் இதை உணர்வதில்லை.

மரங்கள் எரியும்போது பெருமளவு காபனீர்ரொட்சைட் வாயு வளிக்குவிடப்படுகிறது. ஏற்கனவே அதிகமாய் உள்ள காபனீரொட்சைட்டின் அளவு இந்தக் காரணத்தினால் மேலும் அதிகரித்து உலகச் சுற்றாடலை வெப்பமடையச செய்துவிடுகிறது. எனவே, மழைக் காடுகள் அழிக்கப்படுவதால் வளியிலுள்ள காபனீரொட்சைட்டின் அளவு அதிகாரிக்கிறது. அத்துடன் காடுகளில் இருந்து நீராவி உருவாகி வளியை அடைந்து வளியில் உள்ள நீராவிச் செறிவையும் அதிகரிக்ச் செய்கிறது. வெப்பநிலையை மாற்றுகின்றது. இதனால் உலக காலநிலையை நிர்ணயிக்கும் வளியின் கால ஓட்டங்கள் பெருமளவு மாற்றம் அடையலாம்.

எனவே, மழைக்காடுகள் தீக்கிரையாக்கப்படுவது பிறேசில் நாட்டை மட்டுமல்ல உலக சுற்றாடலையே தாக்கக் கூடிய பெரும் பாதிப்பு என எண்ணி இக்காடுகளை அழிக்கும் முயற்சியை உலக் மக்கள் நிறுத்த வேண்டியது அவசியமாகிறது. இல்லையேல் மனித இனமே அடுத்த இரு நூறறாண்டுக்குள் முற்றாக அழிந்து போகும் நிலை உருவாகும்.

பிளாஸ்ரிக் பொருள் பாவனை இன்று உலகின் பிரதான சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகிவிடுகின்றது. உலகெங்கும் பிளாஸ்ரிக் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அன்றாட வாழ்வில பிளாஸ்ரிக் சம்பந்தப்படாத விடயங்களே இல்லை எனலாம்.

பிளாஸ்ரிக் அன்றாட வாழ்வில் பெரிதும் உதவுகின்றன என்பதனை மறுக்கமுடியாது. எனினும், அதனால் சுற்றாடலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. என்பதுடன் எதிர்காலத்தில் உலகின் மிக ஆபத்தான ஒன்றாகவும் பிளாஸ்ரிக் மாறப்போகின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பிளாஸ்ரிக் உக்கி மண்ணாவதில்லை தீயிடும்போதும் 'டையொக்சின்' எனும் நச்சுப்பொருள் வெளியேறுகிறது. அத்தோடு பிளாஸ்ரிக் முற்றாக எரிவதும் இல்லை. மேலும் பிளாஸரிக் தொழிச்சாலையில் தொழில புரிவோருக்கு இரசாயனத் தாக்கங்களும் பாரிய சேதங்களை உருவாக்கி உள்ளன. 'ஆல்கில் பினால்ஸ்' எனும் இரசாயனப் பொருள், உயிரினங்களின் வாழ்வைப் பாழாக்குவதாகவும் தெரியவந்துள்ளது. அத்துடன் பிளாஸ்ரிக் உற்பத்திகள் பெரும் பணவசதி படைத்த முதலாளிகளுடன் தொடர்புபட்டதால் அவற்றிற்கெதிராக நடவடிக்கை எடுப்பதும் இயலாததாகும்.

எனினும், ஐரோப்பிய நாடுகளில் பிளாஸ்ரிக் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து அவற்றின் பாவனை பெருமளவில் குறைந்துள்ளது. ஆனால் இலங்கை- இந்தியா போன்ற நாடுகளில் இதன் பாவனை அதிகரித்துள்ளது. எனவே, சுற்றாடல பாதுகாப்பில் பங்கு கொள்ள வேண்டிய நாம் சுற்றாடலை அபாயகரமான வழிக்குக இட்டுச்செல்லும் பிளாரிக் பாவனையைக் குறைக்க வேண்டியது அவசியமாகின்றது.

பிளாஸ்ரிக்குப் பதிலாக இயற்கையோடு முரன்படாத பாரம்பரிய பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் இதனால் உடல், சுகாதாரக்கேடு ஏற்படுவதைத் தவிர்ப்பதுடன் நாம் வாழும் சுற்றாடலையும், பாதுகாக்க முடியும்.



மேலும், இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும் போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும், அந்த ஆயுதங்களை உற்பத்தி செய்யும் போது வெளியேற்றப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனப்பொருட்களும் உலகச் சுற்றாடலை மாசுபடுத்தி அழிவின் பாதையில் இட்டுச் செல்கின்றது.

இவை அனைத்தும் மனிதர்களாகிய எம் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் பிரதிபலன்களாகவே உள்ளன. எனவே நாம்பெற்ற கைத்தொழில்நுட்ப முனனேற்றங்களை ஆக்கப்பதையிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் பிரயோகிப்பதே மனிதர்களாகிய எமக்குத் தரப்பட்டுள்ள கடமையாக உள்ளது என்பதை மறககக்கூடாது.

தொழில்நுட்ப முன்னேற்றம் இயற்கை அமைப்புக்கள் மீது மட்டுமன்றி, நம் சமூக அரசியல் அமைப்புக்கள் மீதும் ஏற்படுத்தும் பாதிப்பை நாம் உணர்கின்றோம். நமக்கு வெளிப்படையாக கவலை தருவது சுற்றாடல் பிரச்சினை ஆகும். மோட்டார் வாகனங்களின் பாதிப்பும், குளிர்சாதனப் பெட்டிகளின் பாதிப்பும், அணு ஆற்றல் உலைகளை நிர்வகிபதிலும, அணுக் கழிவுகளை அப்புறபபடுத்துவதிலும் உள்ள பிரச்சினைகள் நமக்கு சுற்றாடல் குறித்த கவலையைத் தருகிறது. பொருட்களைக் கட்டும் பொட்டாலங்களை அழிக்க முடியாமை, மேம்படுத்தப்பட்ட அறுவடை நுட்பத்தால் புதுப்பிக்க முடிந்த மற்றும் முடியாத வளங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தல் போன்றவையும் கவலையையே தருகின்றன.

மேற்காணும் பிரச்சினைகளுக்குத் தீர்வானது - சுற்றாடல் நிர்வாகத்தில்தான் உள்ளது. கண்காணித்தல், சட்டமியற்றல், மேம்பட்ட அறிவியல், தொழில்நுட்பம், உள்ளதை அழியாது பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் சுற்றாடல் பிரச்சிரனைகளைச் சரிசெய்யமுடியும் என நம்புகின்றோம். இவையே சுற்றாடல் கேடு அடைவதைத் தடுக்கும் முறைகளாகும்.

மேற்கூறிய அனைத்து மனித நடவடிக்கைகளிலும் இருந்து மனித இனம் தப்பிவாழ முடியுமா? அல்லது முற்றாகப் புவியில் இருந்து மறைய நேரிடுமா? என்ற வினாக்களுக்கான விடையை எடுக்கவேண்டிய கடமையும், சுற்றாடல் பாதுகாப்பில் அக்கறை காட்டவேண்டிய பொறுப்புணர்வும் மனிதர்களாகிய எம்முடையதாகும்.

# சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு பண்டாரவன்னியன் படை எச்சரிக்கை!

## வவுனியாவில் சுவரொட்டி

சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு பண்டாரவன்னியன் படை எச்சரிக்கை விடுத்துள்ளது. வவுனியா நகரப் பகுதிகளில் 'பண்டாரவன்னியன் படை எச்சரிக்கை' என்ற சுவரொட்டி பரவலாக ஒட்டப்பட்டுள்ளது.

பணடாரவன்னியன் படை விசேட பிரிவு வவுனியா எனக் குறிப்பிடப்பட்டுள்ள அச்சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மாபெரும் தியாகிகளையும், பல்வேறு அர்ப்பணிப்புக்களையும் செய்து பல நெருப்பாறுகளைக் கடந்து உலகமே வியத்தகு நிலையில் வெற்றியின் சிகரத்தில் நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கும், ஒன்றுபட்டுள்ள தமிழினத்தைச் சிதைப்பதற்கும் எதிரியானவன் மேற்கொள்ளும் அனைத்து இராணுவ, அரசியல், புலனாய்வு தந்திரோபாய அணுகுமுறைகளுக்கு உட்பட்ட தேசத்துரோக செயல்களிலும், சமூகவிரோத நட வடிக்கைகளிலும் ஈடுபடுவோர் மன்னிக்கமுடியாதவர்கள்.

மனித அழிவுக்கும் தமிழ் பண்பிற்கும் மாறாகச் செயற்படும் ஒவ்வொரு செயல்களும் சமூக விரோதமாகும்.

குழுக்களாகச் சண்டையிடுவது, சந்திகளில் நிற்பது

பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொள்வது, பாலியல் பலாத்காரம், விபச்சாரம்

தீய நாட்டங்களயில் ஈடுபடுவது

போதைப்பொருள் பாவனை

குறிப்பிட்ட வயதுக்குட்பட்டோர் மது அருந்துதல், புகைத்தல்,

வீதிகளில் நின்று நகையாடுதல் மக்களுக்கு இடையூறு விளைவித்தல்

களவு, கொள்ளை, போன்றவற்றில் ஈடுபடுவோர்.

அனைவரும் சமூக விரோதிகளாகவே கருதப்படுவர்.

எனவே தேசத்தின் விடுதலைக்காக சமூக விரோதிகளை அழிக்க நாம் ஒருபோதும் தயங்கமாட்டோம்

தேசத்தின் துரோகிகளாகவும், சமூகத்தின் விரோதிகளாகவும் திகழந்து விலைமதிப்பற்ற உங்கள் உயிர்களை வீணாக்கிக்கொள்ளாதீர்கள்.

உங்கள் வாழ்வு, எதிர்காலம் பற்றி உங்கள் அறிவால் நல்லதொரு முடிவு எடுக்காவிட்டால் எங்கள் ஆயுதம் நிலையானதொரு முடிவெடுக்கும்.

குறிப்பு:- பேனா மையினால் எச்சரிக்கை உங்கள் கண்களுக்கு தெரியாவிட்டால் துப்பாக்கி ரவைகள் மூலம உங்கள காதுகளுக்கு சொல்லித்தருவதற்காக புகைபுக முடியாத இடத்திற்கு புகுந்துவருவோம்.

என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்*
*எழுபது கோடி உறும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஆபத்தை எதிர்கொள்ளும் போர்நிறுத்தம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, பதவியேற்ற பின்னர் இம்முறை மூன்று மாத காலப்பகுதிக்குள் இலங்கையில் சமாதானம் தொடர்வதற்கான சாத்தியக்கூறு குறித்த நம்பிக்கையானது நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சி நிலவிய காலத்தில், சமாதான முயற்சிகளின் ஆரம்பக் கட்ட முன்னெடுப்புக்கள், உறுதியற்ற நம்பிக்கைகளுக்கு மத்தியிலும் ஒரு படிமுறை வளர்ச்சியை நோக்கி வளர்வது போன்ற மாயத் தோற்றத்தை அந்த அரசு தவிர்க்கமுடியவே முடியாத சூழலில் ஏற்படுத்த முயன்றது என்பது உண்மையே!

ஆரம்பத்தில், விடுதலைப் புலிகள், முதலில் சுயாதீனமாக அறிவித்த போர்நிறுத்தத்தை, ரணில் அரசு ஆட்சியில் ஏறியதும், இறுக்கமாகவும் உறுதியாகவும் பற்றிக் கொள்ள வேண்டிய நெருக்கடிநிலைக்குள் தள்ளப்பட்டமையானது ஒரு போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுவதற்கான சூழலை உருவாக்கியது.

இந்தப் போர்நிறுத்த உடன்பாடும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் அப்போதைய ரணில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே அமைதி முறையிலான தீர்வு குறித்த பேச்சுவார்த்தையை நோக்கிய நகர்வினை மேற்கொள்ள வழிவகுத்தது எனலாம்.

இது காலத்தின் கட்டாயமாகிவிட்ட ஒரு நடவடிக்கையென்றே கூற வேண்டும்.

அரசுக்கு மிகவும் சிக்கலானதும், சமாளிக்க முடியாததுமாக இருந்த பொருளாதார நெருக்கடிகள்...

தொடர் பாரிய இராணுவத் தோல்விகள் காரணமாகவும் இழப்புகள் காரணமாகவும் படைத்தரப்பிற்கு ஏற்பட்ட உளவியல் குழப்பங்கள் ....

தொடர் யுத்தம் காரணமாக தென்பகுதி மக்கள் எதிர்கொள்ளவேண்டியிருந்த ஆபத்துக்களும், அமைதியின்மையும் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியிருந்த அழுத்தங்கள்.. எனப் பன்முகப்பட்ட பிரச்சினைகளுக்கு அன்றைய நிலையில் முகம் கொடுப்பதென்பது மிகமிகக் கடினமான விடயமாக இருந்தமையால் போர்நிறுத்தத்தையும், புரிந்துணர்வு உடன்படிக்கையையும் மட்டுமல்ல பேச்சுவார்த்தைகள் சமாதான யாத்திரையையும் மேற்கொள்ளும் அவசியநிலை ரணிலுக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை.

ஐ.தே.முன்னணியின் ஆட்சிக் காலம் ஒரு யுத்தம் நிறுத்தப்பட்டிருந்த அமைதிக் காலம் என்று மட்டுமே கூறமுடியும். அதுவும் தற்காலிகமானதும், அமைதியின்மையின் அச்சுறுத்தலுடன் கூடிய அமைதிக்காலமாகவே இருந்தது.

அவ்வப்போது அரசபடைகளின் செயற்பாடுகள் போர்நிறுத்த சூழலை நிராகரித்து, போரை மீளவும் அரங்கேற்றும் முனைப்புக் கொண்டவையாக இருந்த போதிலும், சமாதானத்தின் மீதான சர்வதேச நாடுகளின் விருப்பார்வத்தினை மதிக்கும் புலிகளின் பண்பும், பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமானதும், உறுதியானதுமான அரசியல் தீர்வொன்றை எட்டவேண்டும் என்பதில் அவர்கள் கொண்டிருந்த உறுதியும், அத்தகைய சூழல் ஒன்றை உருவாக்கும் அவர்களின் மூலோபாயங்கள் அனைத்தையும் சாத்தியமற்றதாக்கிவிட்டன.

சர்வதேச சமூகத்தின் சமாதானத்தின் மீதான அக்கறையை விடுதலைப் புலிகள் மதித்து செயற்பட்ட அளவுக்கு அரசு செயற்படவில்லை அதற்கு அத்தகைய நேர்மை இருக்கவுமில்லை.

இதேவேளை அச்சமயம் இலங்கையில் நிலவிய இரட்டை ஆட்சியாளர்களின் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்த கருத்தியல் ரீதியின் முரண்பாட்டு நிலையானது, இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் வரைபு அரசிடம் கையளிக்கப்பட்டதையடுத்து உச்சநிலையை எட்டியதுடன், நிறைவேற்று அதிகாரவலுக் கொண்ட ஜனாதிபதி - அதிகார பலமற்ற பிரதமர் ரணிலின் ஆட்சியை அவர் நாட்டில் இல்லாத வேளையில் கலைக்கும் சூழலும் உருவானது.

உண்மையில் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையானது ரணிலின் ஆட்சிக்கு எதிரானது என்பதைவிடவும் சமாதான முயறசிகளுக்கு எதிரானது என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

அந்த நடவடிக்கையின் மூலமும், அதனைத் தொடர்ந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மூலம் சமாதான எதிர்ப்புச் சக்திகளுடன் இணைந்தும், ஜனாதிபதி தன்னையும், தனது பேரினவாத உணர்வு நிலைப்பாட்டையும் பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொண்டார்...


ஆட்சி தன்வசமானதும், அவர் சமாதானம் குறித்து தற்போது பெரும் அக்கறை கொண்டவர் போல் காட்டிக் கொள்ள பகீரதப்பிரயத்தனம் எடுத்துவருவதற்கு அவருக்கு சமாதானம் மீதான விருப்பார்வம் எந்த வகையிலும் காரணமாக இருக்கவில்லை என்பதை இந்த மூன்று மாத கால ஆட்சியில் அவரின் செயற்பாடுகள் அனைத்தும் நிரூபித்தே வருகின்றது.

அவரின் தலைமையிலான புதிய அரசு பேரினவாத சக்திகளின் கூட்டணியாக உருவான ஒன்றேயாகும். இது ஒன்றே இந்த அரசு சமாதானத்தைக் கொண்டுவர எந்த வகையலும் லாயக்கற்றது என்பதை உணர்த்த போதுமான காரணியாகும்.

இந்த நிலையில் இப்போது என்றுமில்லாத வகையில் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு இந்த அரசால் பெரும் ஆபத்து உருவாகியுள்ளது என்று அரசியற்துறைப் பொறுப்பாளரின் கூற்று வெளியாகியுள்ளமையானது நிலைமையின் விபரீத சூழலை முழு உலகிற்கும் தெரிவிப்பதாகவே அமைந்துள்ளது எனலாம்.

தேசிய முக்கியத்தும் வாய்ந்த பிரச்சினைகளில் கூட வெளிப்படையாகவும், நியாயமாகவும் நடந்துகொள்வது, உள்நோக்கங்களுடன் இன்னும் போர் தொடர்பான மூலோபாயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசுடனும் ஜனாதிபதியுடனும் சமாதானம் குறித்துப் பேசுவது அர்த்தமுள்ள ஒன்றாக அமையுமா என்பதை சர்வதேச சமூகம் யோசிக்க வேண்டிய காலம் இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




# கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைப் பிரச்சினை உட்பட மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை இந்த வாரத்துக்குள் கூட்டுமாறு, இணைந்த எதிர்க் கட்சிகள் சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டனர்.

கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தை இந்த வாரத்துக்குள் நடத்துமாறு சபாநாயகரிடம் இணைந்த எதிர்க் கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு, நல்ல பலாபலன் கிடைக்குமெனத் தாம் நம்புவதாக, எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளரான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாட்டில் தோன்றியுள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், முக்கியமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள சிறப்புரிமைகள் குறித்து அங்கு பிரஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சுற்றுச் சூழல் வாரத்தை முன்னிட்டு கல்வயல் கிராமத்தில் சிரமதானம்

கல்வயல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட வீதிகள் அனைத்தும் சிரமதானம்மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, கல்வயல் கிராம அலுவலரின் தலைமையில் - கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்தச் சிரமதானம், தொடர்ந்து பிரதி ஞாயிறு தோறும் நடைபெறவுள்ளதாகக் கல்வயல் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் தெரிவித்தார்.

627 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்திலுள்ள பெரும்பாலான வீதிகள் பற்றைகள் நிறைந்து காணப்படுவதால், போக்குவரத்துச் செய்வதில் பெரும் இடர்பாடு காணப்படுகின்றது.

பெருமளவிலான மக்கள் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட வேண்டும் எனவும், சிரமதானத்தில் ஈடுபட முடியாதோர் ஈடுபடுவோருக்கு சிற்றுண்டிகள் வழங்கி உதவலாம் எனவும் கிராம அலுவலகர் மேலும் தெரிவித்தார். (24)

## மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையிலான பயிற்சிகள்

யாழ். மாவட்ட கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், நோர்வே மாணவர்களின் நிதி உதவியுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணபப்பபடிவங்களைக் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியிலும், குளப்பிட்டி வீதியிலுள்ள கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகளில் கலந்துகொண்டு பயன் பெறவிரும்பும் மாணவர்கள் - எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து, அனுப்பி வைக்குமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கோரியுள்ளார்கள். (ப)

# மதுவரித் திணைக்களத்தின் விசேட கருத்தரங்குகள்!

போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, யாழ. மாவட்ட மாணவர்களுக்கு யாழ். மதுவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேட கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டத்தின் ஏற்பாட்டில், கடந்த 26 ஆம் திகதி சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

அன்றைய தினத்திலிருந்து, எதிவரும் ஜுலை மாதம் 2 ஆம் திகதி வரையான ஒருவார காலத்தை யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் எதிர்ப்பு வாரமாக அனுஷ்டிக்கும் வகையிலேயே, யாழ். மதுவரித் திணைக்களத்தால் இந்தப் போதைப் பொருள் எதிர்ப்புப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதன் பிரகாரம் நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் இந்த போதைப் பொருள் எதிர்ப்புக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. அதேபோல் இன்றும் யாழ்.மத்திய கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம் முதலானவற்றில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்ட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு - நாளைய தினமும் யாழ்.மத்திய கல்லூரியிலும் மற்றும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும், யாழ்.இந்துக் கல்லூரியிலும் இடம் பெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கருத்துக்களினூடாக ஆண்டு 10 முதல் உயர்தரம்வரை கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையால் உண்டாகும் தீமைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டு வருகிறது. (ப)

# யாழ்.மாநகரசபை முன்பள்ளிக்கு நவீன விளையாட்டு முற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையினரால் நடாத்தப்பட்டு வரும் முன்பள்ளி மாணவர்களுக்கென நவீன மயப்படுத்தப்பட்ட விளையாட்டு முற்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இந்த முன்பள்ளிச் சிறார்களுக்கு 'ஹேமா' நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்த முன்பள்ளிக்கு விஜயம் செய்த சமூக சேவைகள் நலன்புரி அமைச்சின் செயலாளர் ஜயந்த பீரிஸ் இந்த முன்பள்ளியை நவீன மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும். அதற்கான செலவீனங்களைத் தனது அமைச்சிலிருந்து பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை - குடாநாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நேற்று நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அத்துடன் யாழ் மாநகர சபையினால் அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றம் குடாநாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் காண்பிக்கப்பட்டது.

குடா நாட்டிலுள்ள முன்பள்ளிச் சிறார்களின் ஆளுமையையும், கல்வித் திறமையையும் வளர்த்தெடுக்கும் முகமாக இத்தகைய விளையாட்டு முற்றங்கள் அனைத்து முன்பள்ளிகளிலும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

களத்துக்குரிய குறிப்புக்கள்... - வல்லையூரான்

# இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்த சிங்கள பேரினவாதிகள் பக்க நிலைப்பாடுகள்

'காலத்துக்குரிய குறிப்புக்களில்' சென்ற தடவை முன்னாள் நாடாளு மன்ற செயலாளர் சாம் விஜயசிங்க தெரிவித்த கருத்துக்களைத் தந் திருந்தேன். இடைக்கால நிர்வாகம் ஆரம்பிக்கப்படுமா என்கின்ற எதிர் பார்ப்பு சிங்கள - தமிழ் மக்களி டையே தற்போதுள்ள பெரும் பிரச்சி


திலக் கருணாரத்ன


செனவிரத்ன

னையாக உள்ளது. நிரந்தர சமாதா னம் எற்படுகின்றவரை மிகமிக நீண்ட காலமாக நாம் அனுபவித்துவரும் துன்ப துயரங்களுக்கு ஒரு தற்கா லிக தீர்வாக இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபை அமை யும். அதன்மூலம் தமிழ் பேசும் மக்களாகிய நாம் சிறிதளவாவது நிம்மதியாக வாழலாம் என்ற நம் பிக்கையோடு இருக்கின்ற வேளை யில், இடைக்கால தன்னாட்சி அதி காரசபை என்பது "சட்டத்துக்கு விரோத மனஒன்று' அது தமிழீழத்தின் கார்பன் பிரதி' அது வழங்கப்படக் கூடாது என்றெலலாம் பலவித கருத்துக் களை சிங்கள அரசியல்வாதிகள் வெளிப்படுத்து வருகின்றார்கள். அவை பற்றிய சிலரின் கருத்துக்களை இந் தத் தடவை தருகின்றோம்.

**நிரந்தர சமாதானம் ஏற்படுகின்றவரை மிகமிக நீண்ட காலமாக நாம் அனுபவித்துவரும் துன்ப துயரங் களுக்கு ஒரு தற்காலிக தீர்வாக இடைக்கால நிர் வாக தன்னாட்சி அதிகார சபை அமையும். அதன் மூலம் தமிழ்பேசும் மக்களாகிய நாம் சிறிதளவாவது நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கையோடு இருக் கின்ற வேளையில், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்பது "சட்டத்துக்கு விரோதமான ஒன்று' அது தமிழீழத்தின் கார்பன் பிரதி அது வழங்கப்படக் கூடாது என்றெல்லாம் பலவித கருத்துக்களை சிங்கள அரசியல்வாதிகள் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.**

பல வருடங்களாக நிலவிவரு கின்ற இன முரண்பாட்டுச் சிக்க லுக்கு நிரந்தர தீர்வைத் தேடும் பொழுது இடைக்கால சபையின் அவசியம் ஏற்படும். ஆனால் அதனை போன்று சபையினை வழங்குவதற் குப் பொருத்தமான காலம் இது அல்ல. ஏனென்றால் இடைக்கால சபைக் கான அவசியம் ஏற்படுவது இறுதித் தீர்வு கண்டதன் பின்பு அதனைச் செயற்படுத்துவதற்கு தேவையான சூழலை ஏற்படுத்துவதற்கே. இது வரை அதுபோன்ற நிலைவரம் தெரிய வில்லை. இடைக்கால சபை பற்றிய ஆலோசனை எங்களுடைய காலத் தைப் போன்றே ஜே.ஆர்.ஜெயவர்த் தனவுடைய காலத்திலும் சமர்ப்பிக் கப்பட்டு இருந்தது. அதனால் இடைக கால நிர்வாக சபை தேவையில்லை என்று சொல்வது பொருத்த மற்றது. சமாதான கலந்துரையா டலை முன்னே கொண்டு செல் லும் ஒரு அங்கமாக இடைக் கால நிர்வாக சபை அமைப்பதை காரணமாகச் சொல்ல முடியும். ஆனால், தமிழீழ விடுதலைப புலிகள் கேட்டுக் கொண்டுள்ள விதமாக இடைக்கால நிர்வாகசபை யினை அமைப்பது சம்பந்தமாக மாத்திரம் கலந்துரையாடுவதற்கு நாங்கள் எவ்விதத்திலேனும் ஆயத்தமாக இல்லை. எங்களது நிலைபபாடானது இடைக்கால நிா வாக சபையை நிறுவுவதற்கு சமாந் தரமாக இறுதித் தீர்வு நோக்கியும் கலநதுரையாடல் செய்யப்பட வேண் டும் என்பதே.

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எங்களது உடன்பாடு இல்லை. ஆயினும், சமாதானப் பேச்சுவார்த்தை யின் பொருட்டு ஒரு அடிப்படையை செய்து கொள்ளவேண்டுமென்பது எங் களது நம்பிக்கையாகும். விடுதலைப் புலிகள் ஆலோசனைகளின் அடிப் படையில் கலந்துரையாடுவதற்கு, ஆயத்தம் இல்லை என்பது பற்றி கடுமையான நிலைப்பாட்டினை காலம கடத்துவோமாயின், கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக் காது. நாங்கள் ஆரம்பத்தில் சொல்லி இருந்தோம். அந்த ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு கலந்துரை யாட முடியாதென்று, இதுவரை எங் களது நிலைப்பாட்டில் நாங்கள் இறங் கியது போன்று விடுதலைப்புலிகள் தங்களது நிலைப்பாட்டில் இறங்கி வந்து இடைக்கால நிர்வாக அமைப் பைப்போன்று இறுதித் தீர்வினை ஏற் படுத்துவதன் பொருட்டும் கலந்துரை யாடுவதற்கு முன்வர வேணடும் என நீதிக்கும் நீதிமறு சீரமைப்புக்குமான அமைச்சர் டபிள்யூ பி.ஜே. சென விரத்ன தனது கருத்தினை வெளிப் படுத்தியுள்ளார்.

"விடுதலைப்புலிகள் அமைப்பி னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் கால தன்னாட்சி அதிகார சபைக்கு நாங்கள் எவ்விதத்திலேனும் உடன் பட முடியாது. அதைப் பற்றி நாங் கள் அடிக்கடி வலியுறுத்தியுள்ளோம். எப்படியிருந்தாலும் கூட்டமைப்பு என்ற ரீதியில் நாங்கள் ஏதாவது உடன் பாட்டுக்கு வரமுடியும்." வடக்கு - கிழக்கு சிக்கலுக்குத் தீர்வு நிர்வாக ரீதியில் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்பது எங்களது நிலைப் பாடாகும்.

கூட்டமைப்பு என்ற ரீதியில் கொள கைகளைப் பின்பற்றிக் கொண்டு கருத துச் சிக்கலைத் தீர்ப்பதன் பொருட்டு ஏதாவது ஒரு உடன்பாட்டுக்கு வரு வதற்கு நாங்கள் ஆயத்தம், நிபந் தனைகள் விதிக்கின்ற சமாதானக் கலந்துரையாடலுக்கு நாங்கள் ஆயத் தம் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஏற்றுக்கொண்ட விதமாக விடு தலைப்புலிகள் தமிழ் மக்களது ஏகப் பிரதிநிதிகள் என்பதனை ஏற்றுக் கொள வதற்கும் நாங்கள் ஆயத்தமாக இல்லை. நோர்வேயின் அனுசரணைக் கும் நாங்கள் உடன்பாடில்லை.

நிபந்தனைகளின்றி கலந்துரை யாடுவதற்கான சூழலை உண்டு பண்ணி அதன் ஊடாக வடக்கு-கிழக்கு சிக்கல் தொடர்பாக ஏதாவது ஒருமைப் பாட்டிற்கு வரமுடியும். அதன் பொரு ட்டு விடுதலைப்புலிகள் உடன்பாட் டுக்கு வரவேண்டும். ஒருமைப்பாட்டு டன் நாங்கள் கருதுவது இடைக்கால நிர்வாகம் மாத்திரமல்ல. அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உடன்பாடடை நோக்கிச் செல் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கலாசார மற்றும் தேசிய உரிமைகள் பிரதி அமைச்சருமான சமந்த வித்யாரத்ன கூறி கருத்துக் கள் இவை.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகர் திலக் கருணாரத்ன தனது கருத்துக்களை வெளிப்படுத்து கையில்,


"வடக்கு - கிழக்கு மாகாணங் களின் பொருட்டு இடைக்கால நிர் வாக சபை வழங்குவது என்பது தமிழீழத்தின் பொருட்டு எடுக்கப் படும். பரந்த நடவடிக்கை என்பது எங்களது நம்பிக்கையாகும். ஆகை யால், ஏதாவது அல்லது இடைக் கால நிர்வாக அமைப்பு வழங்குவ தன் பொருட்டு எடுக்கும் முயற்சி களுக்கு நாங்கள் கடுமையான எதிர்ப் பினைத் தெரிவிப்பதாக இங்கு குறிப் பிடவேணடும். எதிர்காலத்தில் உண் டாகப் போகின்ற பயங்கரமான நில வரம் என்னவென்றால் அரசியல மைப்புக்கு வெளியால் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சியாகும். அது இந்நாட்டினை அழிவின் பாதைக்கு இழுத்துச் செல்வது தெளி வான காரணமாகும்.

அரசியலமப்பை மீறி அரசிய லைப்புக்கு வெளியே இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது சட்ட விரோதச் செயற்பாடாகும். ஜனா திபதியினுடைய இந்தச் செயல் நாடாளு மன்றத்துக்குள் எப்படியாவது 113 பெரும்பான்மை பெற்றுக் கொள்வதன பொருட்டு தமிழ்த் தேசியக் கட்ட மைப்பின் ஒத்துழைப்பைப் பெறு வதற்கு எடுக்கும் முயற்சி. இதற்கு எவ்விதத்திலேனும் இடம் வழங்க முடியாது. ஜனாதிபதியினுடைய அந்த முயற்சியை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

அடுத்த காரணம் என்றால் வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கு எவ்விதத்திலேனும் இடைக்கால அமைப்பினை வழங்கமுடியாது. 13 ஆவது திருத்தத்தின் ஊடாக வழங் கப்பட்டுள்ள அதிகாரங்கள் போது மானவை. மாகாண சபை முறைக்கு நாங்கள் எதிர்ப்பு என்பதோடு அந்த சபை முறையின்கீழ் வழங்கப்பட் டுள்ள அதிகாரங்கள் தவிர்ந்தபோது எந்த விதமாகவும் அதிகாரம் பரவ லாக்கப்பட வேண்டிய தேவை யில்லை என்றும் குறிப்பிட்டார். ◆

செய்திக்கட்டுரை - சந்தானகுமாரன்

# பொறுப்பற்ற செயற்பாடுகளால் ஏற்படும் அநியாய உயிரிழப்புகளை தடுப்பது யார்?



காலையில் கண் விழித்த நேரம் முதல் இரவு தூக்கத்துக்கு செல்லும் வரை எந்நேரமும் நாம் பயப்பீதி யுடன் வாழ வேண்டிய காலமாக இந்தக் காலம் மாறிக் கொண்டிருக் கின்றது.

கடந்த இரண்டு வருடங்களாக ஷெல் அடி, துப்பாக்கி வேட்டுக்கள், விமானக் குண்டு வீச்சுக்களின் பேர திர்ச்சியில் இருந்து விடுபட்ட யாழ். குடாநாட்டு மக்கள் தற்போது வாகன விபத்துக்களினாலும், மின்சாரத் தாக் குதல்களினாலும் தினமும் சராசரி இருவராவது உயிரிழப்பதாக பத்தி ரிகைகள் மூலமாக அறிகின்றோம்.

கட்டுப்பாடு, கண்ணியம், முன் னெச்சரிக்கை போன்ற மனிதப் பண்பு களுடன் கடந்த 15-20 வருடங்களுக்கு முன் வாழ்ந்த யாழ்.குடாநாட்டு மக்கள் 21 ஆம் நூற்றாண்டில் தான் தோன்றிகளாகவும், எவரும் எதையும செய்யலாம், எல் லோருக்கும் எல் லாம் தெரியும், எவ ரும் எப்படியும் நடக் கலாம் என்ற மனப் போக்கில் தட்டிக் கேப்பதற்கு ஆளில் லாத தறுதலைக ளகவாழத் தலைப பட்டுள்ளன. குறிப் பாக அததியாவ சியமானதும் ஆப த்து அதிகமுள்ளது மான மின்சாரத் தால் வயது வேறுபாடு இன்றி நாளுக்கு நாள் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான காரணம் என்ன?

பாடசாலை கல்வியை முடித் துக் கொண்ட இளைஞர்கள் தொழில் நுட்பக் கல்லூரி, முறைசாரக் கல்விப் பிரிவு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களில் பூரணமான கல்வி அறிவைப் பெறாது அரைகுறையாகக கற்று இடைநடுவில் அதைக் கை விட்டு விட்டு எனக்கு எல்லாம் தெரி யும் என்ற நிலையில் மின்சாரத் தைக் கையாளும் போது பல விபரீ தங்கள் ஏற்படுகின்றது.

மின்சாரத் தொழில் என்பது 100 வீதம் ஆபத்து நிறைந்த தொழிலா கும். இதை மிகுந்த எச்சரிக்கை யுடன், அவதானத்துடன் மேற்கொள்ள வேண்டும். ஆனால், மின் பிறப்பாக்கி சாதனங்களை (ஜெனரேட்டர்) வாட கைக்கு விடுவோர் குறைந்த சம்ப ளத்தில் தொழிலாளர்கலை வேலைக்கு அமர்த்துவதற்காக அனுபவமில் லாத, முன்னெச்சரிக்கை அற்ற சிறு வர்களைத் தம்முடன் அழைத்துச் சென்று கோவில் திருவிழாக்கள், பொதுக்கூட்டங்கள், திருமண நிகழ்வு கள் போன்றவற்றுக்கு மின்னி ணைப்பு அலங்காரங்களை செய்விக் கின்றனர். அவர்கள் இரண்டு வயர் களை ஒன்றாக இணைக்கும் போது உரிய முறையில் கைகளுக்கு பாது காப்பு உறைகளோ அல்லது வயர் பொருத்தப்பட்ட இடத்தில் சரியான முறையில் சலோ ரேப் சுற்றுவ தில்லை. ஷெப்பிங் பாக் அல்லது பொலித்தீன் பேப்பரை முடிந்து கட்டி விடுவார்கள். இந்த இடத்தில் மின் ஒழுக்கு ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட லாம். அல்லது இவற்றை அறியாத மக்கள் தற்செயலாக முட்டுப்பட்டு மின்சாரத்தால் தாக்குப்பட்டு மரணம் ஏற்பட ஏதுவாகிறது.

கோவில் திருவிழாக்கள், பாட சாலை நிகழ்ச்சிகள், பொதுகூட்டங் கள் என்பவற்றின்போது ஏராளமான ஒலி பெருக்கிகளை மின்சார தூண் களில் ஏறிக் கட்டுகிறார்கள். அந்த தூண்களிலேயே தமது ஒலிபெருக் கிக்கான வயர்களையும் இணைக்கின றார்கள். இதனால் எவ்வளவு பாரிய உயிராபத்து உள்ளதென்பதை எவ ரும் சிந்திப்பதில்லை. இதனை மின் சார சபையினர் கூட கண்டும் காணா தது போல ஏனோதானோ என்ற போக் கில் விட்டுவிடுகின்றனர். அனுமதி யின்றி மின்கம்பங்களில் ஏறுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதை மின்சார சபையினர் கூட தெரிவிப்ப தில்லை.

இது விடயத்தில் மின்சார சபை யினர் தமது பூரண அதிகாரத்தை பயன்படுத்தி மின்கம்பங்களில் ஒலி பெருக்கிகள் கட்டப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் மின் உற்பத்தி சாதனத்தை வாடகைக்கு விடுவோரை பதிவு செய்து வைத்து அவர்களுக்கான தரச்சான்றிதழ் வேலைக்கமர்த்துவோரின் வயது, கல்வி, பாதுகாப்பு ஏற்பாடு, காப் புறுதி போன்ற அவசிய விடயங் களை கண்டிப்பாக பின்பற்றச் செய் தல் வேண்டும். அத்துடன் இது தொடா



பாக கருத்தரங்குகளை ஏற்பாடு செய் தல் சட்டவிரோத மின் பாவனை உள்ள இடங்களில் ஒலிபரப்பு வாக ணங்கள் மூலம் மின்சாரத்தின் ஆப த்தை விளக்கி பிரசாரம் செய்வதன் மூலம் ஓரளவுக்கேனும் உயிராபத் தைத் தடுக்கலாம். மேலும வீதிப் பராமரிப்பாளர்களை **(LINES MEN)** அடிக்கடி அனுப்பி தெருவயர் களை சோதிப்பதுடன் வீட்டு மின்னி ணைப்பு வயர்களையும் பரிசோதித் தல் அவற்றில் படர்கின்ற கொடி களை அகற்றி விடுதல் போன்ற செயல்களை செய்வித்தல் மூலமாக அநியாய உயிரிழப்புக்களைத் தடுக்க முடியும்.

திருமண வீடுகளில் வீடியோ படம் பிடிப்போர் நிகழ்வின் போது மின்சார வயரை தம்முடன் இழுத் துக் கொண்டு திரிவார்கள். அவர் களின் முதுகில் தொங்கும் 'பிளக்' உடைந்ததாகக் கூட இருக்கும். அதற்கு உரிய முறையில பாதுகாப்பு உறை இடுவதில்லை. இதைப்பற்றி யாராவது கேட்டால் 'அது ஒண்டும் செய்யாது நாங்கள் இப்பிடி எத்தி னையைக் கொண்டு திரியிறம்' என வீராப்பு பேசுவார்கள். உயிரிழப்பு ஏற்பட்டபின் போன உயிரை மீட்க முடியுமா? வெள்ளம் வர முன் அணை கட்ட வேண்டுமே தவிர வநத பின்னா் எவரை யும் குறை சொல்லிப பயனில்லை.

கெடுபிடி சொற் கேளாத என்பார்கள. அப்படியாயின் அக்குடி களை நல்வழிப்படுததி நல்ல சமுதாயமாக மாற்றுவது யார்?

மின்சாரம், வாகனப் போக்குவரத்து இவை இரண்டையும் உரிய பொறுப்பு வாய்ந்தவர் கள் தமது பூரண அதிகாரததைப பிர யோகிப்பார்களேயானால் அநியாய உயிரிழப்புக்களைத தடுத்து நிறுத்த முடியும். இதற்கு மக்களின் ஒத் துழைப்பு கண்டிப்பாகக கிடைக்கும். ஆரம்பத்தல் சிறிது எதிர்ப்பு ஏற்பட் டாலும் காலப்போக்கில் மக்கள் ஆதரவு நிறையக் கிடைக்கும்.

தட்டிக் கேட்க ஆளில்லாவிட் டால் எல்லோரும் கெட்ட குடிகளாகி விடுவார்கள். எனவே, துணிந்து செயற் பட்டு வெற்றி பெறுவோம். ♦

## ஈராக்கில் ஏப்ரல் மாதம் கடத்தப்பட்ட

# அமெரிக்க படைச் சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்டார்!



ஈராக்கில் கடந்த ஏப்ரல் மாதம் இஸ்லாமிய போராளிகளால் கடத்தப்பட்ட அமெரிக்கப் படைச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக அராபிய தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமான அல் ஜசீரா தெரிவித்தது.

கடந்த ஏப்ரல் மாதம் பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் வீதி திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கையில் கடத்தப்பட்ட அமெரிக்க சிப்பாயான ஹெயித் மயோபின் (வயது 20) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் கொல்லப்படுவதற்கு சற்று முன்னர் கண்கள் கட்டப்பட்ட நிலை முழங்காலில் இவர் இருக்கும் வீடியோ நாடாவினை அல் ஜசீரா ஒளிபரப்பியிருந்தது.

இவர் வீடியோ நாடா மூலம் அல் ஜசீரா ஒளிபரப்பு நிலையத்தினால் காட்டப்பட்ட ஒரு மணி நேரத்தின் பின்னர் அமெரிக்கா, ஈராக்கிற்கான இடைக்கால அரசுக்கான அதிகாரங்களைக் கையளித்தது.

கொல்லப்பட்ட ஒருவர் முழங்காலில் இருப்பதாகக் காட்டிய அல் ஜசீரா - அவரது முகம் வீடியோக் கமராவிலிருந்து விலகியிருப்பதையும் காட்டியது. அத்துடன், கொல்லப்பட்டவரின் பின்பகுதியிலும், தலையிலுமே சுடப்பட்டதாகத் தெரிவித்த போதும், அந்த இடங்களைக் காட்டவில்லை.

அமெரிக்காவின் ஈராக் தொடர்பான கொள்கைகளுக்கு எதிராகவும் சவுதி, ஈராக் மற்றும் அல்ஜீரியா போன்ற நாடுகளில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களுக்கு அர்ப்பணமாகவே இந்த அமெரிக்கச் சிப்பாய் கொல்லப்பட்டதாக அல் ஜசீராவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் இந்த வீடியோ நாடா குறித்து ஆராய்ந்து வருவதாகவும், இந்த வீடியோ நாடாவில் கொல்லப்பட்டதாகக் காட்டப்பட்டவர் மயோபின்னோ அல்லது வேறொரு படைச்சிப்பாயோ என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லையெனஅமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஈராக்கிற்கான இடைக்கால அதிகாரசபையைக் கையளித்த அமெரிக்க அதிகாரி போல் பிறீமர் நேற்று முன்தினம் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

கடந்த பத்தாண்டுகளுக்குப் பின்னர் தற்போதுதான் அமெரிக்கா - ஈராக்கிற்கான தனது தூதுவரை நியமித்துள்ளது. ஜோன் நிக்றோபொன்ட் என்பவரே தூதுவராக நியமிக்கப்பட்டவராவார். இவர் பாக்தாத்திற்குச் சென்றுள்ளார்.

இதேவேளை, ஈராக்கின் புதிய அரசாங்கம் நேற்றுக் கூடி அங்கு அவசரகால சட்டவிதிகளை அமுல்படுத்துவதா இல்லையா என்பதை ஆராய்ந்ததாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் பிரதமரை தெரிவுசெய்ய தேசிய பேரவை நேற்றுக் கூடியது!



பாகிஸ்தானில் பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஸபாருல்லா ஜமாலியின் இடத்திற்குப் புதிய பிரதமரை தெரிவுசெய்வதற்காக பாகிஸ்தானின் தேசிய பேரவை நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

இந்தக் கூட்டத்தில் சௌத்ரி சௌங்கத் ஹுசைன் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சூழ்நிலை காணப்பட்டது.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் ஹுசைன் பாகிஸ்தானின் தற்போதைய நிதியமைச்சராக இருக்கும் சௌகத் அசிஷ் பிரதமராக பதவியேற்கும் வரை அப்பதவியில் இருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஹுசைனின் பிரதமர் பதவிக்கு எதிர்க்கட்சி வேட்பாளரான மக்டூம் அமின் பாகீம் பலத்த சவாலாக இருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜமாலி பிரதமர் பதவியிலிருந்து விலகியதற்கான காரணம் - அவரது அரசாங்கத்தின் உட்கட்சிப் பிரச்சினையெனக் கூறப்படுகிறது. ஆனாலும் எந்தக் கருத்துவேறுபாடும் இல்லையென்பதைக் காட்டவே ஸபாருல்லா, ஹுசைனின் பெயரைப் பிரதமர் பதவிக்கு முன்மொழிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றில் 342 ஆசனங்கள் உள்ளநிலையில் 190 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவினைப் புதிய பிரதமருக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரதமர் பதவியிலிருந்து ஜமாலி ஏன் விலகினார் என்பது குறித்து இதுவரை பாகிஸ்தானில் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளிவரவில்லை.

ஆனால் ஆட்சி செய்யும் பி.எம்.எல் கட்சியில் எந்த வேறுபாடுகளும் இல்லையென பாகிஸ்தான் அரசாங்கம் திரும்பத் திரும்ப அறிக்கை மூலம் தெரிவித்து வருகின்றது.




# ஈராக்கில் நடந்த தாக்குதலில் 3 அமெரிக்கப் படையினர் பலி!

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி மீது நேற்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 3 அமெரிக்கப் படையினரும், ஈராக்கிய இராணுவ வீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

ஈராக்கின் நிர்வாகத்தை இடைக்கால அரசாங்கத்திடம் அமெரிக்கா ஒப்படைத்த பின்னர் இடம்பெற்ற பெரிய தாக்குதலாக இது அமைந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது - நேற்று அதிகாலை 2 மணிக்கு அமெரிக்க வாகனத் தொடரணி சென்ற வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தே 3 அமெரிக்கப் படையினர் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

அத்துடன், குறைந்தது இரு அமெரிக்கப் படைச்சிப்பாய்கள் படுகாயமடைந்ததாக ஈராக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு உள்ளானவர்கள் அமெரிக்கக் கடற்படையின் விசேட அணியைச் சேர்ந்தவர்கள் என்று முதலாவது டிவிசனைச் சேர்ந்த மேஜர் பில் சிமித் தெரிவித்தார்.

இதன் மூலம் 2003 மார்ச் மாதத்துக்குப் பின் ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்கப்படைகளின் எண்ணிக்கை 632 ஆக உயர்ந்தது.

இதேவேளை, பாக்தாத் பொலிஸ் நிலையமொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையொன்றில் இரண்டு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

பாக்தாத்தின் தென்பகுதியில் உள்ள மஹ்மூதியா நகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸ் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின்போது, ஈராக்கிய பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டதுடன், வேறொருவர் காயமடைந்தார்.

இதனிடையே கிர்குக் மாவட்ட பொலிஸ் தலைமை அதிகாரி ஒருவர் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சிறிய காயங்களுடன் உயிர்தப்பினார்.

இந்தத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரியின் வாகனச்சாரதி உயிரிழந்தார்.


இதேவேளை, இன்னொரு தாக்குதல் சம்பவத்தில் மொசூல் நகரில் இரண்டு குர்திஷ் போராளிகள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று துருக்கியர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

ஒரு வார காலத்துக்கு முன்னர் இவர்களை தவ்ஹிட்வால் ஜிகாத் என்ற குழுவே கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழுவுக்கு ஜோர்தானியரான அபு முசாப் அல்-சர்க்குவாவி என்பவரே தலைமை வகிப்பதாகவும், இந்தக் குழு அல் கொய்டாவுடன் தொடர்புடையது என்றும் கூறப்படுகிறது.

# ஈராக் இடைக்கால அரசிடம் சதாம் இன்று ஒப்படைப்பு!


(பாக்தாத்)



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதியான சதாம் ஹுசைனை இன்று அமெரிக்கா தம்மிடம் ஒப்படைக்கவிருப்பதாக ஈராக்கியப் பிரதமர் அகமட் அலாவி நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். சதாம் ஹுசைனுடன் வேறு 11 முக்கியஸ்தர்களும் கையளிக்கப்படவுள்ளனர்.

இடைக்கால அரசிடம் அமெரிக்கா அதிகாரத்தைக் கையளித்த பின்னர் அலாவி நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாட்டிலேயே ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் அகமட் அலாவி இந்தத் தகவலை வெளியிட்டார்.

# காஸாப் பிரதேசத்திற்குள் இஸ்ரேலிய டாங்கிகள் பிரவேசம்



(காஸா)

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் நடத்திய தாக்குதலை அடுத்து, இஸ்ரேலிய டாங்கிகளும், புல்டோசர்களும் அப்பகுதிக்குச் சென்றன.

நேற்றுமுன்தினம் காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியப் பகுதிக்குள் நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் இரண்டு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்தே இஸ்ரேல் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்களின் தாக்குதலில் காஸா நகரத்திலுள்ள ஊடக நிலையம், தொழிற்சாலையொன்றும், அகதிகள் முகாம் என்பன இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலியர்களின் இந்தத் தாக்குதலால் 25 வயது நிரம்பிய பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், இரண்டு டசினுக்கு மேற்பட்ட புல்டோசர்கள் மற்றும் டாங்கிகள் காஸாப் பகுதிக்குள் பிரவேசித்ததாகவும் இவற்றை நேரில் கண்ட பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

ஆனால், இந்தத் தாக்குதல் தொடர்பாகவோ - டாங்கிகள், புல்டோசர்கள் காஸாப் பகுதிக்குள் பிரவேசித்தது குறித்தோ இஸ்ரேலிய இராணுவத் தரப்பிலிருந்து எதுவித தகவலும் வெளியிடப்படவில்லை.

இரண்டு ஏவுகணைகள் காஸா நகரிலுள்ள பல கட்டடங்கள் அடங்கிய களஞ்சியத் தொகுதியில் வீழ்ந்து வெடித்ததாகவும், இதன்போது அங்கு எவரும் இருக்கவில்லையெனவும் பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

ஊடக நிலையம், உலோகத் தொழிற்சாலை மற்றும் அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்ததாகவும், இவைகள் அனைத்தும் முற்றாகச் சேதமடைந்துள்ளதெனவும் பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் இரவு இந்த நகரப்பகுதியில் மிகப்பெரிய வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்ததாகவும், இது இஸ்ரேலிய ஹெலிகொப்ரர் ஒன்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியபோது கேட்ட சத்தமே எனவும் பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

பலஸ்தீனத்தின் காஸா நகரில் நடத்தப்பட்ட தாக்குதல் பஸ்தீன ஆயுதக் குழுவின் மீதும், அவர்கள் தங்கியிருந்த கட்டடங்கள் மீதுமே நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளான உலோகத் தொழிற்சாலையை ஹமாஸ் இயக்கம் பயன்படுத்துவதாகவும், ஊடக நிலையம் அவர்களது தலைமைப்பீடமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கனடாவின் தேர்தல் முடிவுகள்

# மீளவும் லிபரல் கட்சியே ஆட்சியை அமைக்கவுள்ளது

பரப்பளவில் உலகில் இரண்டாவது பெரிய நாடான கனடாவின் 34 ஆவது நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டபோது 168 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பெரும்பான்மைக் கட்சியாக ஆட்சிபுரிந்த லிபரல் கட்சி - தனது பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ளது. இருந்தபோதிலும் 135 ஆசனங்களுடன் சிறுபான்மை அரசமைக்கும் வெற்றியை லிபரல் கட்சி பெற்றுள்ளது.


308 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்காக நடைபெற்ற தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் இறுதிப் பகிர்வுகள் இவ்வாறு அமைந்திருந்தன.

லிபரல் கட்சி 135 - 36.8 சதவீதமான ஆதரவு வாக்குகள், பழமைவாதக் கட்சி 93 - 29.6 சதவீதமான ஆதரவு வாக்குகள், பாட்டி கியூபெக்குவா 55 - 12.5 சதவீதமான ஆதரவு வாக்குகள், புதிய மக்களாட்சிக் கட்சி 24- 15.6 சதவீதமான ஆதரவு வாக்குகள்.

இந்த நிலையில் புதிய மக்களாட்சிக் கட்சியுடன் இணைந்து லிபரல் கட்சி ஆட்சியமைக்கும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த 3 தேர்தல்களிலும் லிபரல் கட்சியே பெரும்பான்மை வெற்றி பெற்று ஆட்சிசெய்தமை குறிப்பிடத்தக்கது.


கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

2010 ஆம் ஆண்டளவில் 80 வீதமான மக்கள் கடற்கரையில் இருந்து 100 கிலோமீற்றர்கள் தூரத்துக்கு உள்ளாகவே குடியிருப்பார்கள்.




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வவுனியாவில் பாடசாலை அதிபர் தண்ணீர் தாங்கியில் ஏறிப் போராட்டம்

(வவுனியா)

வவுனியா காமினி மகாவித்தியாலய அதிபர் தண்ணீர் தாங்கியில் ஏறிநின்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

நீண்ட காலமாக தமது பாடாலையில் எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் செய்யப்படவில்லையென்றும் காமினி மகாவித்தியாலயமானது சிங்களவர்களுக்கு உரித்தான பாடசாலை என்றும், அத்துடன் தமது பாடசாலை வளாகத்தினுள் வவுனியா வடக்கிற்குரிய கல்விப் பணிமனைக் காரியாலயங்கள் இயங்கி வருவதன் காரணமாக மாணவர்கள் சுமுகமாக கல்வி நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பலமுறை பல தரப்பினரிடம் முறையிட்ட போதிலும் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை என்றும் இதன் காரணத்தினால் தான் விரக்தியடைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிக்குமார்கள் சமரசம் செய்ய முனைந்தபோதிலும் தனக்கு தீர்க்கமான முடிவு வேண்டும் என்று அதிபர் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு வலயப் பணிமனையின் ஊழியர்களை காமினி மகாவித்தியாலய மாணவர்கள் தகாத வார்த்தைப் பிரயோகம் செய்ததுடன் வளாகத்தினுள் மாணவர்கள் வாயிற் கதவைப் பூட்டி ஆர்ப்பாட்டம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நேற்று நண்பகல் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தண்ணீர்த் தாங்கியில் ஏறி சமரசம் செய்த பின்னர் அதிபர் கீமே இறங்கினார். தமது பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு - தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளுடன் அதிபர் கலந்துரையாடினார்.

இதன்போது, வன்னி நாடாளு மன்ற உறுப்பினரால் 1.5 மில்லியன் ரூபாவினை தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்து தருவதாகவும் அவர் சொன்னார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக பிக்குமார்கள் கதைத்ததாகவும் அவர் இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய 5 ஆம் - 8 ஆம் திகதிககிடையில் வருமாறு தெரிவித்ததுடன், காமினி வளாகத்தில் உள்ள காரியாலயங்களை வேறு இடத்திற்கு மாற்ற ஒப்புக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**விசேட தூதுவர்...**

இல்லாததால் நடைபெறவில்லை.

நேற்று தனது 59 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாட கண்டிக்குச் சென்றிருந்ததாலேயே ஜனாதிபதி சந்திரிகா - சொல்ஹெய்மை சந்திக்கவில்லை. நேற்றுமாலையும் இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை கிளிநொச்சிக்குச் செல்லும் சொல்ஹெய்ம், அங்கிருந்து திரும்பியதும் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இராணுவத்துடன்...**

மூலம் பல சம்பவங்கள் வெளிவந்துள்ளதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஏழு பேரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டதாகவும் இவர்களின் செயற்பாடு தொடர்பான விபரங்கள் மட்டக்களப்பில் உள்ள விசேட அதிரடிப் படையினருக்கோ பொலிஸாருக்கோ தெரியாதென விசாரணைகளில் அவர்கள் தெரிவித்ததாகவும் புலிகள் தெரிவித்தனர்.

நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

இசைநாடக விழா

02,03,04 ஜீலை 2004

கருத்தரங்குகள்

காலம் : ஜுலை 03,04 - 2004 (சனி, ஞாயிறு)
இடம் : மறைக்கல்வி நடுநிலைய மண்டபம், யாழ்ப்பாணம்.
நேரம் : மு.ப 9.30 - 1.00 மணி, பி.ப 2.30 - 5.00

இசைநாடகம் தொடர்பாக பல்வேறு தலைப்புக்களில் கருத்துரைகள் துறைசார் புலமையாளர்களால் வழங்கப்படும்.

இசை நாடக அளிக்கைகள்

காலம் : ஜுலை 02,03,04 - 2004 (வெள்ளி,சனி, ஞாயிறு)
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு
நேரம் : மாலை 7.00 மணி

யாழ் .குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள சிறந்த இசை நாடகங்கள் அந்தந்தப் பிரதேசக் கலைஞர்களால் மேடையேற்றப்படும்.

02.07.2004 வெள்ளி
- ஸ்ரீ வள்ளி
- சத்தியவான் சாவித்திரி

03.07.2004 சனி
- பக்தநந்தனார்
- பூதத்தம்பி

04.07.2004 ஞாயிறு
- அரிச்சந்திரா – அயோத்திய காண்டம், காசி காண்டம், மயானகாண்டம்

கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி/2715)

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 222 2393

திருமறைக் கலாமன்றம்

# நான்கு கடற்கரும்புலிகளுக்கு நினைவுக்கற்கள் நாட்டப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கடற்பரப்பில் படகு விபத்தின்போது வீரச்சாவடைந்த நான்கு கடற்கரும்புலிகளின் அஞ்சலிக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

கடற்கரும்புலி கப்டன் ஈகைவண்ணனின் திருவுருவப்படம் திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பாலகுமார் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் யாழ்.பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன், கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

மாவீரரின் திருவுருவப்படம் கோபபாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

மாவீரரின் தாயார் நினைவுக்கல்லினை திரைநீக்கம் செய்துவைத்தார். கடற்கரும்புலி லெப்ரினன்ட் கேணல் அமுதத்தின் திருவுருவப் படம் வல்வை மகளிர் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கடற்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் அன்பழகன் தலைமையில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது.

வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாச செயலாளர் க.சூரியகுமார் கடற்புலிகளின் வடமராட்சி கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கல்யாணி, வல்வை மகளிர் கல்லூரி அதிபர் நகுலாம்பிகை ஆகியோர் வீர வணக்க உரை நிகழ்த்தினர்.

திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

மாவீரரின் பெற்றோரால் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது.

கடற்கரும்புலி மேஜர் கதிரோவியனின் திருவுருவப்படம் மத்தனோடை சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் யாழவன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

மாவீரரின் திருவுருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துவரப்பட்டது. மாவீரரின் பெற்றோர் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்தனர்.

கடற்கரும்புலி லெப்.கேணல் யாழினியின் திருவுருவப்படம் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச, தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் கைலாயநாதன் தலைமையில் வீர வணக்கக்கூட்டம் நடைபெற்றது.

கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர் ஒன்றியத் தலைவர் திவ்வியராஜ், தேசிய எழுச்சிப் பேரவைப் பிரதிநிதி த.கதிர்காமநாதன் ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர். இம்மாவீரரது திருவுருவப்படம் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துவரப்பட்டு இம்மாவீரரது பெற்றோரால் நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

## வித்துடல் விதைப்பு

சுகயீனம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரச்சாவடைந்த வீரவேங்கை சமுத்திரனின் வித்துடல் நேற்றுக்காலை திருகோணமலை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக சம்பூர் 5 ஆம் வட்டாரத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக துயிலும் இல்லத்துக்கு வித்துடல் எடுத்துவரப்பட்டது.

திருமலை மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் யாழிசை தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.எழிலன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பெருமளவான மாணவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர். (10,04)

**மட்டக்களப்பில்...**

களுக்கு முன்னர் சென்று கணவர் உயிருடன் இருக்கும் விபரத்தை அறிவித்தனர்.

அத்துடன் கணவரான சாந்தலிங்கம் எங்குள்ளார் போன்ற மேலதிக தகவல்களை பின்னர் அறிவிப்பதாகவும் - அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

**இடைக்கால...**

இதனால், சமாதான முயற்சிகள் இழுபறி நிலைக்கு உள்ளானதுடன், சமாதான முயற்சிகள் தாடருமா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியது.

இந்த நிலையில், கடந்த வாரம் லண்டனில் தங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா, தனது நிலைப்பாட்டை மாற்றியிருப்பதாக நோர்வேக்கு அறிவித்திருந்தார்.

இடைக்கால நிர்வாக சபை குறித்து முதலில் பேச்சு நடத்துவதற்கு தமது அரசாங்கம் விருப்பத்துடன் இருப்பதாக லண்டனில் தன்னைச் சந்தித்துப் பேசிய நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனிடம் ஜனாதிபதி சந்திரிகா உத்தியோகப்பற்றற்ற முறையில் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த நிலைப்பாடு தொடர்பாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், லண்டனில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தத் தீர்மானம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கவே நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

# தனியார் சாரதிகளுக்கு பொலிஸாரின் விசேட வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் போக்குவரத்துச் சபை சாரதிகளுக்கான விசேட வகுப்பொன்றை நடத்த யாழ்.போக்குவரத்து பொலிஸார் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாரதியின் கவனமின்மையும், வீதிப் போக்குவரத்து குறித்த அக்கறையீனமுமே விபத்துக்கள் ஏற்படக் காரணம் என்பதால் இது தொடர்பாக விளக்கமளிக்க மற்றும் கையேடுகளை வழங்குவதற்குமாகவே இந்த வகுப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 10.30 மணிக்கு இந்த வகுப்பு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.(ப)

# பொலிஸாரின் பதவி உயர்வு பட்டியல் இன்று வெளியாகும்

பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு குறித்த அனுமதிக்கப்பட்ட பட்டியல் இன்று வெளியிடப்படவுள்ளது.

பதவி உயர்வு குறித்த விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸ் ஆணைக்குழு இந்தப் பட்டியலை இன்று பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவிலான பொலிஸாருக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற அநீதியான செயற்பாடுகளால் சுமார் நான்காயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸாருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொலிஸாரின் பதவி உயர்வுகள் அவர்களது சம்பள நிலுவைகள் மற்றும் இதர பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா இன்று பொலிஸ் அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# 29 இலங்கை அகதிகள் தலைமன்னார் திரும்பினர்!

தமிழகம் - இராமேஸ்வரத்தில் இருந்து பட்குகள் மூலம் நாடு திரும்பிய 29 ஈழத்தமிழ் அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புமாறு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இரண்டு படகுகள் மூலம் தலைமன்னார் கடற்கரைப்பகுதிக்கு நேற்று முன்தினம் வந்த இந்த அகதிகள் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சோமசுந்தரம்



கோப்பாயை பிறப்பிடமாகவும், தற்பொழுது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட **இராமலிங்கம் சோமசுந்தரம்** அவர்கள் இன்று அதிகாலை (30.06.04) பிரா்ன்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பதிகளின் மூன்றாவது புதல்வனும், றுக்குமணியின் அன்புக்கணவரும், அமலகுமார், விஜயகுமார், நந்தகுமார், ஜெயக்குமார், தில்லைநாயகி, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தலிங்கம், கோணேஸ்வரலிங்கம், கீதா, ரஞ்சிதமலர், யாழினி, விஜயா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 07
பண்டார வளவு,
நல்லூர் வடக்கு,
நல்லூர்.**

(772)

**தகவல்
கோணேஸ்வரலிங்கம்
(மருமகன்)**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.